இதழ்–27

16.06.2021

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# அந்த வேரை அறுத்து விடுங்கள்





இந்த சமூகம் எனும் மரத்தின் சமநிலையை பேணுவதற்கான ஆணிவேராமே சாதீயம்! அதை அறுத்தால் சமூகமே ஆட்டம் கண்டு விடுமென்கிறார்கள். ஆட்டம் காணட்டுமே! பிறப்பால் ஏற்றமும் தாழ்வாயும் இருக்கும் இந்த சமூகம் ஆட்டம் கண்டால் தவறொன்றும் இல்லை. புதிதாய் தளைக்கும் வேர்கள் சமூகத்தை கட்டாயம் தாங்கும்.

சாதீயத்திற்கு எதிரான எழுத்துக்களும் பேச்சுக்களும் பெருமளவில் காணப்பட்டாலும் செயல்கள் என்பவை அற்பத்திலும் சொற்பமாகவே இருக்கிறது. கல்லாதவர்கள் மட்டுமல்ல கற்றவர்கள் மத்தியிலும் இந்த சாதீயம் வேரூன்றி இருக்கிறது. பிறருக்கென வரும் போது எல்லோரும் நல்லவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவரவர்களுக்கென வரும்போது தான் சுயரூபம் தெரிய வருகிறது.

சமூகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவிக் காணப்படும் சாதீயத்தை அழிப்பது எப்படி? அழிக்க நினைபாபவர்களே! எடுத்த எடுப்பிலேயே எல்லோரையும் திருத்த மூற்படாதீர்கள். முதலில் நீங்கள் திருந்துங்கள். தெரிந்தோ தெரியாமலோ உங்களால் ஒருவர் சாதீயம் சார்ந்து பாதிக்கப்படாதவாறு நடந்து கொள்ளுங்கள். ஒரு வருடமாவது உங்கள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இதை உறுதி செய்த பின் உங்களுக்கே ஒரு திருப்தி ஏற்படும். அதன் பின் உங்கள் குடும்பத்தில் இதனை பிரயோகித்துப்பாருங்கள். குடும்ப மட்டத்திலும் நீங்கள் வென்று விட்டீர்கள் என்றால் அதுவே மிகப்பெரிய வெற்றி. அதன் பின் உங்கள் நெருங்கிய உறவுகள் மத்தியில் பிரயோகிக்கலாம்.

இவ்வாறு பக்க வேர்களை ஒவ்வொன்றாக வெட்டுவது தான் ஒரே வழி. எடுத்த எடுப்பிலேயே ஆணி வேரை வெட்டிவிடலாமென்று புறப்பட்டால் அது கடல் நீரை அள்ளுவது போலாகி விடும். சாதீயத்திற்கு எதிரானவர்களே! முதலில் ஒன்று படுங்கள்! உங்களுக்கு நடந்த அநீதி உங்களுக்கு தெரிந்த இன்னொருவருக்கு நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

***அந்த அலரி மரத்தின் ஆணி வேர் அறுபடத் தொடங்கும்!***



இணை ஆசிரியர்கள்
ஜ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

வடிவமைப்பாளர்கள்
வ. குணநீதன்

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

திறனாய்வாளர்
கு. கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை...

04 சம்மதங்கள் உள்ள போதும்
08 சிங்ககிரித்தலைவன்
11 நவீன வேதாள புதிர்கள்
12 நீயும் ஏழை தான்...
13 ஈழச் சூழலியல்
16 வெள்ளைக் காதல்
20 ஏகாதிபத்தியம்
23 மாமன் இருக்கேன் உனக்காக
25 சட்ட விழுமியம்
27 முடிவுறாக்கொட்டுக்கள்
29 சிந்தனைக்கினிய கந்தபுராணம்
31 குறுக்கெழுத்துப் போட்டி
32 கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்
35 சித்திராங்கதா
40 3.47 வினாடிகள் தொடக்கம் முடிவிலி வரை
42 நியூசிலாந்தின் புதிய ரட்சகன்

ரசிக்கும் சீமானே!

# சம்மதங்கள் உள்ள போதும்

பவி

அமைதியான குளத்தில் கல்லெறிந்தது போல மனதின் ஒவ்வொரு இழையும் அலைகிறது. முடியும் தாழியுமாய் குறுக்காய் அலையும் நீரலை போல இவள் மனமும் உணர்வுகளின் ஏற்ற இறக்கங்களில் இரு முனைவுகளுக்கும் ஊசலாடுகிறது.

//நதியினில் ஒரு இலை விழுகிறதே
அலைகளில் மிதந்தது தவழ்கிறதே
கரைசேருமா உன் கைசேருமா
எதிர்காலமே//

அடி மனதில் சலன அலைகள் பிறந்திருக்கிறது. அந்த அலையின் போக்கில் அலையும் இலையாய் இவள்.


நடுக்கடலில் சுனாமி அலைகள் உருவாகும் போது, கடலின் ஆழம் அதிகம் என்பதால் அலையின் வேகம் அதிகமாயிருக்கும். இதனால் அலைநீளம் கூடிய வீச்சம் குறைந்த அலைகள் உருவாகும். அதே அலை கரையை அண்மிக்கையில், கடலின் ஆழம் குறைய அலையின் வேகம் குறையும். இதனால் அலைநீளம் குறைந்து வீச்சம் அதிகரிக்க இராட்சத அலைகள் உருவாகும்.

"தினம் மோதும் கரை தோறும்
அட ஆறும் இசை பாடும்
ஜில் ஜில் ஜில் என்ற ஸ்ருதியிலே"

அதே போல ஆழ்மனதில் அமைதியாக தோன்றிய சலன அலைகளும் மனக்கடலின் ஓரங்களை தொட கரையோடு மோதி மணல் மீது மேவி குழி தேடி ஓடி மீண்டும் வந்த வழி தாவும் கடலலையாக ஆர்ப்பரித்து தெறித்து, தொடர்ந்து கரையை நோக்கி வந்து கொண்டிருக்கும் சலன அலைகளுடன் தலையீடு செய்கிறது.

//உன் சுவாசங்கள் எனைத் தீண்டினால்
என் நாணங்கள் ஏன் தோற்குதோ
உன் வாசனை வரும் வேளையில்
என் யோசனை ஏன் மாறுதோ//

கரையை நோக்கி வரும் சலன அலைகளும் கரையில் தெறித்த சலன அலைகளும் ஒன்றை ஒன்று தலையீடு செய்வதால் மேற்பொருந்தலடைந்து ஆக்கல், அழித்தல் தலையீடுகள் தோன்ற, நின்ற சலன அலைகளையும் புதிய பண்புள்ள அடிப்பு அலைகளையும்



உருவாக்கி இவளை முற்றாய் ஆட்கொள்கிறது. மனவெளி எங்கும் பல சலன மீடிறன்களிலும் அதிர்வு நடனம் தொடங்கிறது.

"மனமெங்கும் மாய ஊஞ்சல்
உனதன்பில் ஆட ஆட
மழை பொங்கும் தூய மேகம்
உயிர் உள்ளே சாரல் போட"



மனநல மருத்துவத்தில் Bipolar Affective Disorder என்ற ஒரு நோய் இருக்கிறது. நிலையான ஓய்வு நிலையிலிருந்து, உணர்வுகள் கட்டற்ற உச்சங்களை தொடும் அதீத உணர்ச்சிக் கொப்பளிப்புக்கும், அத்தனை உணர்வுகளும் அடங்கி முடங்கிய நிலைக்கும் இடையே மனமெனும் ஊஞ்சல் உணர்வுகள் அலையும் நிலைக்கே இந்த பெயர். அதாவது நிலையான Euthymic எனும் நிலையிலிருந்து உணர்வுகளின் கொப்பளிப்பான Mania எனும் நிலைக்கும் உணர்வுகள் அடங்கிய Depression என்ற நிலைக்கும் மனம் ஊசலாடும் நிலை.

இப்பொழுது இவள் இது போன்ற நிலையில் தான் தவிக்கிறாள்.

"உந்தன் கண்ஜாடை விழுந்ததில்
நெஞ்சம் நெஞ்சம்
தறிகெட்டுத் தளும்புது நெஞ்சம்
எந்தன் நூலாடை பறந்ததில்
கொஞ்சம் கொஞ்சம்
பிறை முகம் பார்த்தது கொஞ்சம்
ரத்தம் கொதிகொதிக்கும் உலை
கொதித்திடும் நீர்க்குமிழ் போல
சித்தம் துடிதுடிக்கும் புயல்
எதிர்த்திடும் ஓர் இலை போல
பனித்துளிதான் என்ன செய்யுமா
மூங்கில் காட்டில் தீ விழும்பொழுது
மூங்கில் காடென்று ஆயினள் மாது"

இவளது மனக்குளத்தில் கல்லெறிந்தது யார்? ஏன் இத்தனை மனக்குழப்பம்?

காரணம், நேற்றிரவு அவன் அனுப்பிய கடிதம்! காதல் கடிதம்!

"ஒரு கடிதம் எழுதினேன் என்
உயிரை அனுப்பினேன்
அந்த எழுத்தின் வடிவிலே நான்
என்னை அனுப்பினேன்
காதலி என்னைக் காதலி"

என்று அவன் காதல் விண்ணப்பம் வைக்க, பெண் அகம் இப்பொழுது தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

//யாரோ இவன் யாரோ இவன்
என் பூக்களின் வேரோ இவன்
என் பெண்மையை வென்றான்
இவன் அன்பானவன்//

இவளிடம் தன் எதிர்கால துணைவன் எப்படியிருக்க வேண்டுமென்ற எந்த எதிர்பார்ப்பும் பெரிதாக

இல்லை. ஆனாலும் யாரோ ஒருவன் நமக்கென்று இருப்பவன் வருவான் தானே என்றிருப்பவள். திடீரென்று இவனது வருகை.

"காதல் எந்த நிமிடம் பிறக்கும்
கடவுள் மனதும் அறிவதில்லை"



இவன் தான் என்னவனா? இவனுக்கு என்ன பதில் சொல்வது? அத்தனை நாட்களாக பார்த்துப் பேசி அளாவியிருக்கிறார்கள். அவன் தான் தன்னவன் என்ற எண்ணம் இதுவரை இவளிடம் வந்ததில்லை. ஆனாலும் அவன் மேல் இவளுக்கு மதிப்பு இருக்கிறது. இப்பொழுது அவனோ,

//உன் காதலில் கரைகின்றவன்
உன் பார்வையில் உறைகின்றவன்
உன் பாதையில் நிழலாகவே வருகின்றவன்//

என்ற உறுதிமொழிகளோடு வந்து, உன்னுடன் வாழ வேண்டும் என்னுடன் கூட வா! என்கிறான்

"நிழல் போல நானும்
நடை போட நீயும்
தொடர்கின்ற சொந்தம் நெடுங்கால பந்தம்
கடல் வானம் கூட நிறம் மாற கூடும்
மனம் கொண்ட பாசம் தடம் மாறிடாது
நான் வாழும் வாழ்வே உனக்காக தானே
நாள் தோறும் நெஞ்சில் நான் ஏந்தும் தேனே
எந்நாளும் சங்கீதம் சந்தோஷமே
வாய் பேசிடும் புல்லாங்குழல்
நீதானொரு பூவின் மடல்"

அவன் கடிதத்தை எத்தனை முறை படித்தாளோ தெரியாது. அத்தனை முறையும் புதிதாக தெரிந்தது! எனக்கு காதல் கடிதமா? அந்த ஆனந்த திகைப்பு இன்னும் போகவில்லை. இன்ப அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. ஆனால் அவன் உன் பதிலுக்காக காத்திருப்பேன் என்று முடித்திருக்கிறானே! என்ன பதில் சொல்வது?



//என் கோடையில் மழையானவன்
என் வாடையில் வெய்யிலானவன்
கண் ஜாடையில் என் தேவையை அறிவான் இவன்//

தன் கண்ணை பார்த்தே தன்னை புரிந்து கொண்டு தன் தேவைகள் அத்தனையும் அவன் சேவையாய் செய்வான் என்று மனதில் எங்கோ நம்பிக்கை மணி ஒலிக்கிறது. ஆனாலும் குழப்பம்!

//எங்கே உன்னை கூட்டிச்செல்ல
சொல்வாய் எந்தன் காதில் மெல்ல
என் பெண்மையும் இளைப்பாறவே
உன் மார்பிலே இடம் போதுமே//



அவன் தன்னை கொண்டாட வந்தவனென்ற உணர்வு பரவ, அவன் என்ன வேண்டும் என்று நாளை கேட்கும் போது என்ன பதில் சொல்வது?

"உன் மார்பில் என் பெண்மை இளைப்பாற இடம் போதுமடா!"

என்ற பதிலும் அவளறியாமல் பிறக்கிறது. இப்படியே அவனினால் ஆட்கொள்ளப்பட,

//ஏன் இன்று இடைவெளி குறைகிறதே
மெதுவாக இதயங்கள் இணைகிறதே
உன் கைவிரல் என் கைவிரல்
கேட்கின்றதே//

இவன் எனக்கானவன் தான். இனி வரும் காலமெல்லாம் அவன் விரல் பிடித்து நடை பழக தயாரானாள்.

//எனக்காவே பிறந்தானிவன்
எனை காக்கவே வருவானிவன்
என் பெண்மையை வென்றான்
இவன் அன்பானவன்//

தன் பெண்மை அவனிடம் தோற்று அவன் தன்னை வென்று விட்டான் என்பதை நினைத்து நாணி, அவனை தன் காதலில் வாழ் நாள் நெடுகிலும் திழைந்திருக்கச் செய்ய தன் சம்மதத்தை இப்படிச் சொன்னாள்,

"ஒரு ஆணுக்கு எழுதிய இலக்கணம்
உன்னிடத்தில் கண்டேன்
என் பாதத்தில் பள்ளி கொள்ள
உனக்கொரு அனுமதி தந்தேன்
என் ஆடைதாங்கிக் கொள்ள
என் கூந்தல் ஏந்திக் கொள்ள
உனக்கொரு வாய்ப்பல்லவா
நான் உண்ட மிச்ச பாலை
நீ உண்டு வாழ்ந்து வந்தால்
மோட்சங்கள் உனக்கல்லவா
வானம் வந்து வளைகிறதே
வணங்கிட வா"



ஜீவா ஜீவனின்

# சிங்கிரித்தலைவன்

ஆட்சி 26

காதல் யானை

வண்டிலை விட்டு இறங்கிய லீலாதேவி தன் கடைக்கண்களில் நீர் கசிய தரையைப் பார்த்து நின்றாள்... காசியப்பன் தன் கரத்தால் அவள் நாடியை நிமிர்த்தி அவளின் அழகு ஒளிரும் முகத்தை அணு அணுவாக அளந்து இரசித்தான்! அவளை மார்போடு அணைத்துக்கொள்ள காசியப்பனுக்கு ஆசை அதிகம் இருந்தாலும், அதற்கான இடமும் தருணமும் இது இல்லை என்பதை உணர்ந்திருந்தான் அவனின் முன்னால் நின்ற லீலாதேவியின் கரங்களைப்பற்றி, அவர்களுக்கு முன்பாகப் பதிந்த, தனது யானையில் ஏற்றிக் கொண்டான்! யானையின் மேலே முன்னே லீலா தேவியும் அவளின் பின்னாக காசியப்பனும் அமர்ந்து கொண்டனர்!

அவர்களை ஏற்றுவதற்காகப் பதிந்த யானை, அவர்களை ஏற்றிய பின்னர் ஆடி அசைந்து மேலே எழுந்த போது சமநிலை தவறிய லீலா தேவியின் இடையை இறுகப்பற்றி தன்னோடு அணைத்துக் கொண்டான் காசியப்பன்!

மூன்று மாதங்களாகிறது அப்படி ஒரு இறுக்கமான அணைப்பை அவள் அனுபவித்து...
தன் கைகளால் காசியபனின் இரண்டு தொடைகளையும் இறுக அழுத்திப் பிடிக்க முயன்றாள். இடையைக் காசியப்பன் பற்றிய எதிர்பாராத நிகழ்வால் தொடையைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டு அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு தலைகுனிந்து இடைவளைத்தாள்! நீண்ட நாட்களின் பின்னால் காசியப்பன்முகத்தில் காதல் நிரம்பி வழிந்தது!

இனி இடம் என்ன...? தருணம் என்ன...?
தன் முன்னே ஒரு பாவையைப் போல அமர்ந்திருந்த,
அவள் கழுத்திலே ஒரு முத்தத்தைப்பதித்தான்! சிலிர்த்துப் போன லீலாதேவி, முனகலோடு, நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்! இத்தனை நாட்களாய் பிரிந்து இருந்து விட்டு இப்போது மட்டும் என்ன திடீர் காதல் என்பதைப் போல பொய்கோவம் கொண்ட அவள் விழிகளில் கண்ணீர் வழிந்தது! அவள் பார்வை காசியப்பனுக்கு புரிந்தது! தன்கையால் அவள் கன்னத்தில் வழிந்த நீரை துடைந்தான்.

”தேவி... என் மீது கோவமா? உன் மீது கொண்ட காதல் உண்மையானது ... இந்த நாட்டின் அதிகாரம் மீது நான் கொண்ட காதல் உறுதியானது ... அதை அடையும் முயற்சியில் உன் அன்பின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு இருக்க வேண்டிப் போனது! பிரிந்திருந்த இத்தனை நாட்களிலும் உன்னை நினைக்காத நாள் என்று ஒரு நாளை சொல்ல முடியாது ...! தேவி இந்த கல்லில்

ஈரம் சுரக்கச் செய்வது உன் நினைவுகள் தான்" என்று காசியப்பன் சொல்லி முடிப்பதற்குள் லீலாதேவி அழுத கண்ணீர் அவள் மார்பை நனைத்திருந்தது..!

"பிரபு.... இந்தச் சிறியவள் உங்கள் அன்பைப் பெற்றதே பெரும்பேறு... உங்கள் அருகில் இப்படி அமர்ந்து போவது எல்லாம் கடவுள் தந்த வரமாகவே உணர்கின்றேன்! உங்கள் வார்த்தைகள் என்னை மேலும் கலக்கத்துக்குள்ளாக்குகின்றன. உங்கள் தூய அன்பின் அணியாக உங்கள் இதயத்தின் ஒரு ஓரத்தில் இடம் கிடைத்தாலே போதும்.... இந்த அவலையின் வாழ்வு நிறைந்து வழியும்... அது ஒன்றே என்றும் நான் விரும்புவது"

லீலாதேவியின் வார்த்தைகள் காசியப்பனின் இதயத்தைத் தைத்தது...

"அவலை என்று கூறாதே தேவி! இனி இந்தப் பூமியின் ராணி நீதான்! காலாகாலமாய் ஆட்சியாளர்கள் வகுத்த அநீதி நிறைந்த வழமைகளை மாற்றுவேன்! புதிய இலங்கையை படைப்பேன்!. அது தேவலோகத்துக்கு நிகராக மிளிரும்! அங்கே எனது ஆட்சி, அதன் மாட்சி அத்தனையிலும் சரிசம பங்காய் நீயே இருப்பாய்... நிமிர்ந்து பார் தேவி அதோ தெரிகிறதே சிகரம்... சிங்கச்சிகரம்! அங்கே எனது அரண்மனையில் உனது பங்கே பாதி இருக்கும்... நீ அவலை இல்லை.. ஆளப்பிறந்தவள்!"

என்று சொன்ன காசியப்பன் தூரத்தே தெரிந்த அந்த ஒற்றைக்குன்றை லீலாதேவிக்கு சுட்டிக்காட்டினான்... அவள் ஆச்சரியத்தோடு அண்ணார்ந்து பார்த்தாள்! வழியில் பாதை இரண்டாகப் பிரிந்தது... அந்தக்குன்றுக்கு போவதற்காக புதிதாய் ஒரு பாதைக்காக காசியப்பனின் வீரர்கள் காட்டை வெட்டி செப்பனிட்டுக் கொண்டிருந்தனர்... வழமையான பழைய பாதையில் இருந்து



காசியப்பனின் யானை அந்தப் புதிய பாதையில் இறங்கியது... கோரும் அவனது குதிரை வீரர்களும் அணி அணியாக அந்தப் பாதையில் இறங்கினர்... எருது பூட்டிய வண்டிகள் சதங்கைச் சத்தங்கள் ஒலிக்க அந்தப் பாதையில் இறங்கின... வீரர்களும் பணியாளர்களும் தூரத்தில் தெரிந்த அந்தக் குன்றைக்காட்டி தம்முள் கதைத்துக் கொண்டனர். லீலாதேவி ஆச்சரியமாக,

”பிரபு... இதுதான் நீங்கள் கண்ட குன்றா? உன்னிச்ச இதனைப் பற்றித்தான் அடிக்கடி கூறுவான் உண்மையில் அதன் மேலே என்ன இருக்கிறது...?
பாவம் உன்னிச்ச நீங்கள் இளவரசர் என்பதை அறிந்த நாளில் இருந்து பிரமை பிடித்தவன் போல திரிகிறான்... உங்களை வணிகராக நினைத்து அவன் செய்த சேட்டைகளுக்கு தண்டனை கிடைக்கப்போகிறது என்று புலம்பிக் கொள்வான்”

காசியப்பன் கீழே எட்டிப் பார்த்தான் உன்னிச்ச மாட்டுவண்டியில் விறைத்துப் போய் வந்து கொண்டிருந்தான்... அவனின் நிலையை எண்ணிய காசியப்பன் கலகலவெனச் சிரித்தான்.... முன்னே சென்ற மீகாரன் திரும்பி நிமிர்ந்து காசியப்பனைப் பார்த்து தன் கைகளை உயர்த்தி ஏதோ சைகை செய்தான்! பதிலுக்கு காசியப்பனோ தன் தலையை அசைத்து மறுமொழி தந்தான்... யானை அசைந்து ஆடி மிதமான வேகத்தில் சென்றுகொண்டிருந்தது...

“பிரபு... ஏன் அந்தச்சிகரம் உச்சியில் தட்டையாக வெட்டி எடுத்ததைப் போல இருக்கிறது? எப்படி அங்கே போவது? உச்சிவரைப் போகலாமா? அங்கே இருந்து பார்த்தால் எங்கள் ஊர் தெரியுமா??”

ஒரு குழந்தையைப்போல லீலா தன் கேள்விகளை அடுக்கிக்கொண்டு போனாள்! உண்மை தான்... எந்த இடத்தில் துன்பங்கள் தொலைகிறதோ... அந்த இடத்தில் மனது குழந்தையைப்போல் மாறிவிடுகிறது...

“தேவி... உன் கேள்விகளுக்கும் விடை தேடித்தான் இந்தப் பயணம்... இந்த யானையின் முதுகைப்போல, தட்டையாய் அது ஏன் இருக்கிறது என்ற கேள்வி என்னுள்ளும் எழுகிறது... இதோ பார்... வீரர்கள் இப்போது தான் பாதை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்... உன் கேள்விகளுக்கும் பதிலாகிய வழிகள் பிறக்கும்...”

என்றவன் தன் கையை உயர்த்தி வழியில் உயர்ந்திருந்த மரக்கிளையில் படர்ந்திருந்த காட்டு முல்லைக்கொடியை மலர்களோடு பிடுங்கிக்கொண்டவன், அதை ஒரு கிரீடம் போல சுற்றி லீலாதேவியின் தலையில் வைத்தான்! லீலா தேவி அந்தக் குன்றைவிட உயரமாக மேலே எங்கோ பறந்துகொண்டிருந்தாள்!

**யானை நகரும்....**




# புதிர் 06
# மணக் கோலத்திற்கு வழிகாட்டும் எண்கோலம்

சினமிகா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 11 | 23 | ? | 95 | 191 |

விக்ரமாதித்தன் சரியான பதிலைக் கேட்ட வேதாளம் முன்போலவே கட்டவிழ்த்துக் கொண்டு முருங்கை மரத்தில் தொற்றிக் கொண்டது. விக்ரமாதித்தன் மறுபடியும் வேதாளத்தைப் பிடித்துக் கொண்டு வரும்போது அது பின்வரும் கதையைச் சொல்லியது.

உஜ்ஜயினி நகரத்தில் ஹரிஸ்வாமி என்ற அந்தண சிரேஷ்டர் ஒருவர் இருந்தார். அவர் புண்ணியசேனன் என்னும் அரசனை அண்டிப் பிழைத்து வந்தார். ஹரிஸ்வாமிக்கு ஒரு மனைவியும், தேவஸ்வாமி என்ற ஒரு மகனும், அழகில் ஈடு இணையற்ற சோமப்பிரபை என்ற மகள் ஒருத்தியும் இருந்தனர். அவளுக்கு கல்யாண வயது வந்தது. தன் அழகில் பெருமிதம் கொண்ட அவள் தன் தாயார் மூலமாக "வீரம், ஞானம், விஞ்ஞானம் மூன்றில் வல்லவனுக்கே என்னை மணம் செய்து கொடுக்க வேண்டும். என் வாழ்க்கையில் உங்களுக்கு அக்கறை இருந்தால் என்னை வேறு யாருக்கும் மணம் செய்து கொடுக்க கூடாது." என்ற செய்தியை தன் தந்தைக்கு அறிவித்தாள்.

இதைக் கேட்ட ஹரிஸ்வாமிக்கு ஒரே கவலையாக போய் விட்டது. இம் மூன்று துறைகளிலும் பாண்டித்தியமான மாப்பிள்ளையை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற கவலை அவரை வாட்டியது. அவர் இவ்விதம் இருக்கும் சமயம் அவர் குமாரியின் அழகைப் பற்றி கேள்விப்பட்டிருந்த சூஸ்திரவான் என்கின்ற பிராமண இளைஞன் ஒருவன் ஹரிஸ்வாமியை அணுகி அவர் மகளை தனக்கு மணம் செய்து தர வேண்டும் என கேட்டான். உடனே அவர் அவ் இளைஞனை நோக்கி வீரம், ஞானம், விஞ்ஞானம் ஆகியவற்றை பூரணமாக அறிந்தவனையே என் மகள் மணந்து கொள்வாள் என்று கூறி அவ் இளைஞனை சோதிக்கும் நோக்கில் புதிர் ஒன்றை விடுத்தார்.

இவ் வரிசையில் நான்காவது எண் என்னவாக இருக்க வேண்டும் என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? இவ் எண்கோல சிக்கலைத் தீர்த்தால் எனது குமாரியை மணம் முடித்து தருவது பற்றி சிந்திக்கிறேன் என்று ஹரிஸ்வாமி

**புதிர் 05 - விடைகள்**

5 கொரில்லாக்கள்

25 குரங்குகள்

70 தேவாங்குகள்

கூற பிரமண இளைஞனும் யோசிக்கத் தொடங்கினான்.

விக்ரமாதித்தனே நீர் கூட பலதும் கற்றுத் தேர்ந்த பண்டிதராயிற்றே இக் கோலத்தில் நான்காவது எண் என்னவாக இருக்கும் என்பதை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்று கூறி முடித்துக் கொண்டது வேதாளம்.

துமி அன்பர்களே! மறுபடியும் விக்ரமாதித்தனுக்கு உதவிட உங்கள் பதிலை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

# நீயும் ஏழை தான்!!!

பசித்தவன் அருகில் இருக்க பார்க்க வைத்து உண்ணும்,
நீயும் ஏழை தான். (ஏழை )
பாதையிலே கிடந்தவனை பார்க்காமல் போகும்,
நீயும் ஏழை தான்.(விபத்து )
மாடி வீட்டில் இருந்து கொண்டு மண்ணை பார்த்து போகும்,
நீயும் ஏழை தான்.(பணக்காரன் )
மார்பில் போட்டு வளத்தவனை, மரியாதை கெடுக்கும்,
நீயும் ஏழை தான்.(தாய் )
பொன் வேண்டும் என்றும் பெண்ணை விற்கும்,
நீயும் ஏழை தான்.( மனிதன் )
போரில் வென்றவனை புறமுதுகில் குத்தும்,
நீயும் ஏழை தான் (வீரன்)

நலம் கேட்கும் நண்பனை நாவில் புறம் சொல்லும்,
நீயும் ஏழை தான்.(நண்பன் )
நல்லார் முகத்தை நாவூறு என்று சொல்லும்,
நீயும் ஏழை தான்.(நாவூறு )
பையில் உள்ளதை பாதையில் துலைத்தேன் என்று சொல்லும்,
நீயும் ஏழை தான்.( பணக்காரன்)
பார்க்காத ஒன்றை பார்த்தேன் என்று சொல்லும்,
நீயும் ஏழை தான். (சாட்சி)
பாதத்தில் வீழ்ந்தவனை பள்ளத்தில் தள்ளிய,
நீயும் ஏழை தான். (மன்னிப்பு)
இத்தனை சொல்லியும் திருந்தாத
நீயும் ....................?



வி.தனுஷ்ரன்
சுதுமலை

# ஈழச் சூழலியல் 14

முதிர்ச்சியில்லாக் கபில நிறமண்:- முதிராக் கபிலநிறமண்ணானது மலைநாட்டின் கண்டி, மாத்தளை, மாவனெல்ல போன்ற ஈரவலய பகுதிகளிலும் , உலர்வலயத்தின் அம்பாறையின் மேற்கு எல்லை, பதுளையின் வடகிழக்கு எல்லை போன்ற பகுதிகளிலும் காணப்படுகின்றது. அதிக ஆழமற்ற, பூரண வடிதலுக்குட்பட்ட, கடும் கபில நிறம் முதல் மஞ்சள் கலந்த கபில நிறம் வரையான நிறமாறுபாடு கொண்டதாகவும், மத்திம இழையமைப்பையும், ஓரளவுக்கு அமிலத்தன்மை வாய்ந்ததாகவும் இம் மண் விளங்குகின்றது. செங்குத்தான தேய்ந்த சாய்வுகள் முதல் இன்று நிலத்தோற்றம் வரை இம்மண் பரந்துள்ளது. காட்டுவளர்ப்பிற்கு ஏற்றதாகும். அத்துடன் நீர்ப்பாசன வசதியுடன் காய்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாம்.

அண்மைக்கால மணல் மண் (மணல்சார் றெகோசோல்ஸ்):- இலங்கையின் கரையோரங்களில் அண்மைக்கால மணற்படிவுகளைக் காணலாம். இவை கடலோரங்களில் மணற்குன்றுகளாகவும், கடற்கரைகளாகவும் உருப்பெறுகின்றன. அதிகமாக யாழ்ப்பாணம் மேற்குகரையோரம், தலைமன்னார், கற்பிட்டி, மட்டக்களப்பு முதலான கரையோரங்களில் இவ்வகை மண் காணப்படுகின்றது. இம் மண் மிகவும் ஆழமானதாகும் அதாவது 3 மீற்றருக்கு மேற்பட்ட தடிப்பையுடையதாகும். வெள்ளை நிறத்துடனும், தனி மணியுருத் தன்மையான இழையமைப்புடனும் காணப்படுகின்றது. நீர் வடிந்து செல்லும் தன்மை அதிகமாக இம் மண் கொண்டுள்ளது. வரண்ட வலயத்தில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கும், ஈரவலயங்களில் தென்னைப் பயிர்ச்செய்கைக்கும் பொருத்தமானவையாகக் காணப்படுகின்றது.

வண்டல் மண்:- நீரினால் அரித்துக் காவி வரப்பட்ட அடையல்களானது நதிப்பள்ளதாக்குகள், நதி



வடிநிலங்கள் என்பவற்றில் வண்டல் மண்ணாகப் படிந்துள்ளன. மண் இழையமைப்பானது மணல் தன்மை முதற்கொண்டு களித்தன்மை வரையில் காணப்படுகின்றது. மண்ணின் நிறமானது வெள்ளை, செங்கபிலம், சாம்பல், கறுப்பு எனப் பலவாகும். அத்துடன் இம்மண்ணின் நீர்வடிந்து செல்லும் தன்மை அதிகளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. நீர் அதிகம் வடிந்து செல்லாத களித்தன்மை கொண்ட மண் நெற் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகும். மென்மையான இழையமைப்பைக் கொண்ட மண் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகவும் காணப்படுகின்றது.

கருமண்(கிரமுசோல்ஸ்):- இது கரும் பருத்தி மண் எனவும் கிரமுசோல்ஸ் எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வகை மண்ணானது முருங்கன், கெட்டிபொல(மாத்தறை), அம்பேவில (இரத்னபுரி) போன்ற உலர்வலயப்



பகுதிகளில் காணப்படுகின்றது. இது பருத்திப் பயிர்ச்செய்கைக்கும், நெற்பயிர்ச்செய்கைக்கும் ஏற்றது.

உவர் நிலமண் (சொலோடைஸ் சொலோநெற்ஸ்):- சொலோடைஸ் சொலோநெற்ஸ் எனப்படும் உவர்நில மண் வகைகளைக் கரையோரக் களப்புகளையடுத்துக் காணலாம். குறிப்பாக மகாவலி B பிரதேசத்தின் கிழக்கு மற்றும் உள்ளக சமவெளிகள் (கண்டக்காடு - திரிகோணமடு) போன்ற பகுதிகளிலும் ஆனையிறவு, பூநகரி போன்ற பகுதிகளிலும் காணலாம். கபில நிறத்திலிருந்து கடும் கபில நிறம் வரை காணப்படுகின்றது. மண்ணின் இழையமைப்பு கரடு முரடானதாக இல்லாமலும் அமிலத்தன்மை குறைந்த மண்ணாகவும் காணப்படுகின்றது. இது காரத்தன்மையுடையதாயினும் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

சதுப்பு நில மண்:- சதுப்பு நில மண்ணானது கரையோரம் சார்ந்த நீர் தேங்கிநிற்கும் சேற்றுப் பாங்கான பகுதிகளில் குறைந்தளவு வடிதலுக்குட்பட்ட இம்மண் காணப்படுகின்றது. குறிப்பாக கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி போன்ற



பகுதிகளில் உள்ள சதுப்பு நிலங்களில் காணப்படுகின்றது. குறைந்தளவு வடிதலுக்குட்பட்ட மண் மேற்பரப்புப் படையானது கடும் கபில நிறம் முதல் கறுப்பு சேதனப் பொருட்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இம்மண் நெல் மற்றும் நாணற்புல் உற்பத்திக்கு பொருத்தமானதாகும்.

செம்மஞ்சள் மண்மீதுள்ள லற்றோசோல் மணல்சார்ந்த மண்:- இவ்வகை மண்ணானது மாதம்பை, நீர்கொழும்பு ஆகிய தாழ்நில ஈரவலயப் பகுதிகளில் காணப்படுகின்றது.

கைவிடப்பட்ட நீர் நிலைகளில் படிந்துள்ள கியுமிக் மண்:- இவ்வகை மண்ணானது ஈரவலயத்திலும் உலர்வலயத்திலும் காணப்படுகின்றது. குறிப்பாக மத்தியமலைநாட்டின் கிழக்குப் பகுதிகளில் இது காணப்படுகின்றது. கைவிடப்பட்ட நீர்நிலைகளில் இவ்வகை கியுமிக் மண்கள் படிந்துள்ளன.

கல்சியம் நிறைந்த செம்மஞ்சள் லற்றோசல்:- கல்சியம் நிறைந்த செம்மஞ்சள் லற்றோசல் மண்ணனாது பெரிதும் செம்மஞ்சள் லற்றோசல் மண்வகையை ஒத்தாகும். இருப்பினும் இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு கல்சியம் நிறைந்த செம்மஞ்சள் லற்றோசல் மண்ணானது ஒரு சில சென்ரி மீற்றர்கள் தொடக்கம் பல மீற்றர்கள் வரையில் ஆழத்தில் வேறுபடுகின்ற சுண்ணாம்புக் கற்களை அடியில் கொண்டுள்ளமையே ஆகும். நீர்ப்பாசனம் செய்யப்படுகின்ற உப உணவுப் பயிச்செய்கைக்கு இம்மண் மிகவும் பொருத்தமானதாகும்.

ஆராய்வோம்........



த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

தொண்டரடிப்பொடியன்




2

# வெள்ளைக் காதல்



பிரித்தானியா! பல தேசங்களுக்கு சுதந்திரம் கொடுத்த தேசம்! கடல் வழி சென்று நிலங்களை தனதாக்கிய நாடு! இன்று பல நாடுகள் சுதந்திர தினம் கொண்டாட காரணமான நாடு! இவ்வாறு பல பெருமைகளை கொண்ட பிரித்தானிய தேசத்தில் இன்றுவரை தொடரும் இன்னொரு பெருமைதான் பிரித்தானிய அரச வம்சம்!

சனநாயகமென்கிற மக்களாட்சி உலகெங்கும் பரவினாலும் மன்னராட்சிக்கு உரிய உயரிய மரியாதையை காலகாலமாக பிரித்தானியா அரச வம்சம் பெற்றுக்கொண்டு வருகிறது. ஆனாலும் இங்கிலாந்தின் அரச குடும்பம் என்பது மக்கள் வரிப்பணத்தை வீணாகவும், போலி ஆடம்பரத்திற்கும் செலவு செய்யும் மிக மோசமான அமைப்பாக உள்ளதாகவும் பலர் கருதுகிறார்கள். சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த கருத்துக்கணிப்பில் சுமார் 20 சதவீதம் முதல் 40 சதவீத மக்கள் இந்த அரச குடும்பம் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும் என கருதுகிறார்கள்.

ஆனாலும் கடல் கடந்து கண்டம் கடந்து அரச வம்சத்தவர் மதிக்கப்படக் காரணமானவர்களில் முக்கியமானவர் தற்போதய மகாராணியார் எலிசபெத். அவருக்கும் இளவரசர் பிலிப்பிற்குமான 74 வருட ஆழமான காதல் பற்றி நான் அறிந்ததை சொல்கிறேன்.

நான்கு பிள்ளைகள், 8 பேரக்குழந்தைகள், 7 கொள்ளுப்பேரர்கள் என பெரும் வாழ்க்கை வாழ்ந்த இளவரசர் ஃபிலிப்பின், குழந்தை பருவம் மிகவும் கொந்தளிப்பானது, சோகங்கள் நிறைந்தது. சொல்லப் போனால்... மகாராணி எலிசபெத்தின் இளமைப் பருவம் எவ்வளவுக்கெவ்வளவு மகிழ்ச்சியுடன் செழிப்புள்ள ஒரு அமைதியான வாழ்க்கையாக இருந்ததோ... அதற்கு அப்படியே நேர்மாறான இளமைப் பருவ வாழ்க்கை வாழ்ந்திருந்தார் ஃபிலீப் .

இரண்டாம் கிரேக்க - துருக்கி இன போர் உக்கிரமடைந்து, 1922-ல் துருக்கி வெற்றியடைய கிரேக்க அரச குடும்பங்களை சார்ந்த ஒரு குடும்பம், அவசர அவசரமாக உயிர் தப்பிக்கும் நோக்கத்தில் தங்கள்

குழந்தைகள் மற்றும் நான்கு சிறுமிகளுடன், கூடவே பழங்கள் வைக்கும் மரத்திலான ஒரு பழக்கூடையையும் எடுத்து கொண்டு அங்கிருந்து ஓடுகிறார்கள். அந்தப் பழக்கூடையில் இருந்தது ஒரு அழகிய ஆண்குழந்தை. துணியால் பத்திரமாக சுற்றப்பட்ட அந்தக் குழந்தை தான் இளவரசர் ∴ப்லிப். அப்படி தப்பிய குழந்தை தான் பிற்காலத்தில் இங்கிலாந்து நாட்டின் ராணி எலிசபெத்தை திருமணம் செய்து இங்கிலாந்தின் இளவரசராக இங்கிலாந்து நாட்டு மக்களின் மனதிலும் நெடுங்காலத்திற்கு கோலோச்சியவர்.



அங்குமிங்கும் அலைந்ததில், ∴பிலிப்பின் தாயார் அலைஸுக்கு மனநிலை தவறி விட்டது. ஒரு நாள் காலையில், பிலிப் மற்றும் அவரது சகோதரிகளை உறவினர் ஒருவர் வீட்டிற்கு வெளியே அழைத்துச் சென்றார். மாலையில் குழந்தைகள் திரும்பி வந்தபோது, அவரது தாயார் அங்கில்லை. கடுமையான மனப்பிறழ்வு (ளஉாணைழிாசநமெைய.) தாக்கத்தில் இருந்த அலைஸ், குழந்தைகளுக்கு தெரியாமல் ஸ்விட்சர்லாந்தில் இருந்த மனநல காப்பகத்தில் கொண்டு போய் சேர்க்கப்பட்டார்.

ஜூன் 10, 1921-ல் கிரேக்கம் மற்றும் டென்மார்க்கின் இளவரசர் ஆண்ட்ரூவுக்கும் - பேட்டன் பெர்க்கின் இளவரசி அலைஸுக்கும் பிறந்த ∴பிலிப்பின் சிறு பிராயம் உண்மையில் மிக கொடுமையாக இருந்தது. தாய் அலைஸ் "ஐரோப்பாவின் மூதாட்டி" என்றழைக்கப்படும் மகாராணி விக்டோரியாவின் கொள்ளுப்பேத்தி மற்றும் லூயிஸ் மவுண்ட்பேட்டனின் மூத்த மகள் ஆவார். தந்தை வழியோ, ஐரோப்பாவின் Father-in-Law என்றழைக்கப்பட்ட டென்மார்க் மன்னர் கிறிஸ்டியன்ஐஓ. கிரேக்க துருக்கி இன போரில் தப்பியோடி

சிறிது காலத்தில், ∴பிலிப்பின் மூத்த சகோதரிகள் நால்வருக்கும் ஜெர்மன் அரச குடும்பத்து இளவரசர்களுடன் திருமணம் முடித்து செல்ல... தந்தையோ, தாய் இல்லாததால் வேறொரு பெண்ணுடன் வாழ்வதற்கு ஓடிவிட... 10 வயதான ∴பிலிப், அனாதையாக நின்றார். பின்பு அவரது மாமா லூயிஸ், அவரது வாழ்க்கைக்கு பொறுப்பேற்று கொண்டது உண்மையில் பிலிப்பின் அதிர்ஷ்டமே...



அவர்தான்.. நாடு, பணம், இருப்பிடம் எதுவுமே இல்லாத ஃபிலிப்பிற்கு இங்கிலாந்தின் இளவரசனாக மாற பாதை அமைத்துக் கொடுத்தவர். 13 வயது எலிசபெத்தை ஃபிலிப்பிற்கு அறிமுகமாக வாய்ப்பமைத்து கொடுத்து, அவர்களின் நட்பு வளர்ந்து திருமணத்தில் முடிய காரணகர்த்தாவாகவும் இருந்தவர்.



ஏற்கனவே ஒருவரை ஒருவர் சந்தித்திருந்தாலும், 1939ஆம் ஆண்டு டார்ட்மௌத் கடற்படை பயிற்சிக் கல்லூரியில்தாதான் அவர்கள் தங்கள் காதலுக்கான பிள்ளையார் சுழியை போட்டுக் கொண்டார்கள். வசீகரமிக்க 18 வயது படைப்பயிற்சி பெறுபவராக இளவரசர் ஃபிலிப், 13 வயதான இளவசரி எலிசபெத்தின் கண்களில் தென்பட்டார். பலரது காதலைப் போலவே இவர்களின் காதலும் கண்ணின் வழியே இணைந்தது. கண்கள் உருவாக்கிய உறவை கடிதங்கள் மாறி மாறி வளர்த்து விட்டன. ஒரு தடவை அழைப்பெடுத்து, பதிலளிக்கவில்லை என்றாலே பிரிவென்ற நிலைக்கு சென்றுவிடும் இந்தக் காலத்துக் காதலர்களுக்கு கடிதங்களின் வெகுமதியும், காத்திருப்பின் பெறுமதியும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆம்! காதல் நிரம்பி வழியும் அந்த கடதாசிக்கான காத்திருப்பு என்பது மாதங்களைத் தாண்டிப் போனாலும் மனம் தினம் தினம் எதிர்பார்த்துக் காத்திருக்கும். அந்த காகித எழுத்துக்களை வாசிக்க ஆசை கொண்டு கண்ணீர் தாள் நனைக்கும். கண்ணீர் என்கிற பன்னீரால் குளிப்பாட்டப்பட்ட அந்த காகிதங்களின் பெறுமதி கடிதங்களால் காதலித்தவர்களுக்கே தெரிந்திருக்கும். இதற்கு நல்ல சாட்சியும் இவர்களே! எலிசபெத் தன் இளமைக்காலத்தில் பிலிப்பிற்கு எழுதிய கடிதமொன்று அண்மையில் மிகப்பெரிய தொகைக்கு ஏலம் போயுள்ளது.

தொலைபேசி போலல்ல, கடிதங்கள் பெரும்பாலும் தாம் வளர்க்கும் காதலை கலியாணத்தில் சேர்த்து விடும். அந்த வகையில் நெடுநாள் காதலர்களான பிலிப் மற்றும் எலிசபெத்தும் கல்யாணத்திற்கு தயாரானார்கள். எலிசபெத்தின் 21ஆவது பிறந்தநாளில் அவர்களின் நிச்சயதார்த்தம் குறித்த அறிவிப்பு பொதுவெளியில் வெளியானது.





திருமணத்திற்கு முன் எலிசபெத்தின் தாய்க்கு இளவரசர் ஃபிலிப் கடிதம் ஒன்றை எழுதினார். அதில் "தான் காதலில் எந்த தடையுமின்றி முழுவதுமாக விழுந்துவிட்டேன்" என தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. தனது தாய் அலைஸின் பழைய நகைகளை அழித்து, எல்லோரும் அசந்து போகும் விதத்தில் மிக அழகாக வடிவமைக்கப்பட்ட திருமண மோதிரத்தை ஆசையுடன் எலிசபெத்துக்கு அணிவித்து, தன் மனைவி ஆக்கிக் கொண்டார், ஃ பிலிப்.

இரண்டாம் உலகப் போர் முடிந்து இரண்டே வருடங்கள்தான் ஆகியிருந்த நேரத்தில் 2,000 விருந்தினர்கள் முன்னிலையில் இந்த காதலர்கள் திருமணம் செய்து கொண்டனர். நாடு அப்போது போரின் தாக்கத்திலிருந்து மீண்டு வந்த தருணதாதில் இந்த திருமணம் ஒரு அரிதான கொண்டாட்டமாக நிகழ்ந்தது. "நமது கடினமான பாதையில் வண்ணங்களின் சாரல் இந்த திருமணம்" என சர்ச்சில் பிலிப் தெரிவித்திருந்தார்.

ஒருபுறம் இளவரசர் ஃபிலிப் கடற்படை அதிகாரியாக உயர் பதவிகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார். மறுபுறம் பிலிப் தம்பதிகள் பெற்றோராக வாழ்வியல் பதவிகளில் முன்னேறிக் கொண்டிருந்தனர். திருமணம் முடிந்த அடுத்த வருடம் அவர்களின் மூத்த மகன் சார்ல்ஸ் பிறந்தார். அடுத்ததாக மகள் ஏன் (யுநெ) பிறந்தார். இந்த இளம் அரச குடும்பம் மால்டாவில் வாழ்ந்து கொண்டிருந்தது. அது ஒரு சாதாரண வாழ்க்கை போலதான் இருந்தது. அந்த இளம் ஜோடி, ஒருவரின் துணையில் மற்றொருவர் எந்த கவலையுமின்றி அரண்மனை கடமைகளிலிருந்து தள்ளி ஒரு மகிழ்ச்சிகரமான காதலை முழுமையாக அனுபவிக்கக்கூடிய வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்.



தென்றல்களுக்கு பழக்கப்பட்ட வர்களுக்கு புயல்களை சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. இன்னொரு காதலால் இவர்கள் காதல் வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்பட்டது.

என்ன புயல்? யாருடைய காதல்? என்ன திருப்புமுனை? அடுத்த இதழில் பார்க்கலாம்...

நீளும்...




அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

### ஏகாதிபத்திய வழிமுறைகள்

**1. போர் மற்றும் கையகப்படுத்துதல் (Conquest and Annexation)**

ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த பல முறைகள் கையாளப்பட்டன. நவீன காலத்தில் ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளால் அனுப்பப்பட்ட படை வீரர்கள் பல நாடுகளின் தலைமையை வீழ்த்தி அங்கு ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டினர்.

**2. சலுகைகள் அல்லது உரிமைகள் (Concession or Franchise)**

சில நேரங்களில் தீவிர அமைப்புகள் பிற்படுத்தப்பட்ட நாடுகளின் பொருளாதார வளங்களை சுரண்டும் பிரத்தியேக உரிமையைப் பெற்றிருந்தன.

**3. குத்தகை உரிமை (Lease hold)**

சில நாடுகள் தங்கள் குடியேற்றநாடுகளிடமிருந்து ஒரு நிலப்பகுதியை குத்தகைக்குப் பெற்று அங்குள்ள பொருளாதார வளங்களைச் சுரண்டி வந்தன. பின்னர் அந்த குத்தகை நிலங்கள் மீது அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தின.

**4. செல்வாக்கை நிலைநாட்டுதல் (Sphere of Influence)**

செல்வாக்கை நிலைநாட்டுதல் என்ற பெயரில் சில நாடுகள் பொருளாதாரச் சுரண்டல் வேலையில் ஈடுபட்டனர். 1907 ஆம் ஆண்டு பிரிட்டன் மற்றும் ரஷ்யா, பாரசீக நாட்டைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர்.

**5. பாதுகாப்பு ஏற்படுத்துதல் (Protectorate)**

பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்க நாடுகளின் தலைமை பொறுப்பில் இருப்பவர்களுடன் பொம்மை ஆட்சி (Puppet Rule) உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டு மாபெரும் நிலப்பரப்பை தங்கள் வசப்படுத்திக் கொண்டு, பின் சுரண்ட முற்பட்டனர்.



1912 இல் பிரான்ஸ் மொராக்கோ மீது இவ்வாறு தனது பாதுகாப்பை நிலை நிறுத்தியது.

**6. பொருளாதாரம் அல்லது வரிக்கட்டுப்பாடு (Economic and Tariff Control)**

சில சமயங்களில் வலிமையான ஒரு நாடு வலிமை குறைந்த நாட்டின் மொத்த பொருளாதார அதிகாரங்களை தன் வயப்படுத்திக் கொள்ளுதல் பொருளாதார அல்லது வரிக்கட்டுப்பாடு முறையாகும்.


உதாரணமாக முதலாம் உலகப் போருக்கு முன் துருக்கியில் அனைத்து பொருளாதார அமைப்புகளும் ஒட்டோமான் பொதுக் கடன் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

**7. ஒப்படைப்பு முறை (Mandate System)**

**இது புதிய ஏகாதிபத்தியத்தின் இறுதி வழிமுறையாகும்.**

இது 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜெனரல் ஜான் ஸ்மட் என்பவரின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்டது.

முந்தைய கால குடியேற்ற நாடுகளில் பலவும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளும் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இச்சங்கம் சில கட்டுப்பாடுகளுடன், இத்தகைய நாடுகளைப் பராமரிக்கும்படி பல நாடுகளிடம் கேட்டுக் கொண்டது. இத்தகைய நாடுகளை நிர்வாக ஒப்படைப்பு நாடுகள் என்றழைக்கிறோம்.



### ஏகாதிபத்தியத்தின் சாதக விளைவுகள்

வலிமை மிக்க நாடுகள் வலிமையற்ற நாடுகளில் போக்குவரத்து மற்றும் தொடர்பு முன்னேற்றங்களை ஏற்படுத்தின.

குடியேற்ற நாடுகளில் கல்வி, மருத்துவம், புதிய விவசாய முறை, அமைதி, ஒற்றுமையை வளர்த்தன.

### ஏகாதிபத்தியத்தின் பாதக விளைவுகள்

குடியேற்ற நாடுகள் தங்கள் சுதந்திரத்தை இழந்தன. மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டதோடு அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

குடியேற்ற நாடுகளால் மூலப்பொருள்களை வழங்குவதற்கும் பொருள்களை விற்பதற்கு சந்தைகளாகவும் விளங்கின.

அந்நாடுகளின் உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டு, ஏழ்மையும், வேலையின்மையும் அதிகரித்தன. பாரம்பரிய விவசாய முறை மாற்றப்பட்டு, உற்பத்தி மூலப் பொருள்களை பயிரிட நிர்பந்திக்கப்பட்டன. இதனால் சில இனங்கள் மறைவுக்கு காரணமாயின.

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த ஏகாதிபத்தியம் எனும் கட்டுரையினை தழுவி மாற்றங்களுடன் இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

சாரல் தூறும்..............!!!!!

**தயவு செய்து வெளியே செல்லும் போது முகக் கவசம் அணியுங்கள். உங்களிடம் பணம் இருக்கலாம். ஆனால் மருத்துவமனையில் இடமில்லை.**



# மாமன் இருக்கேன் உனக்காக...

கொல்லப் பக்கம் போற பொண்ணு
மெல்ல கொஞ்சம் பாரு கண்ணு
ஓமாமன் நாந்தான்னு
ஒத்தயாட தரிச்சவளாய்
ஒய்யாரமா திரிஞ்ச பொண்ணு
பாவாடை தாவணியில்
பவளமல்லி சுமந்ததென்ன.....
மணப்பொண்ணா வெக்கப்பட்டு
மாமனத் தள்ளி போறதென்ன....?

குலதெய்வ கோயிலுக்கு
கும்பாபிஷேகோ தேவையில்ல
குமரிப் பொண்ணு நீ இருக்க-
இந்த மாமனுக்கங்க என்னவேல.....?

மல்லிக்கொடி தாண்டியங்கே
மல்லிகை பூ செல்வதென்ன
மணம் வீசி போறவளே
மாமன் மனசு சோகிக்கிடக்குதிங்க...

வாழ்க்கையில ஒரு பொண்ண
ஏறெடுத்தும் பாக்கலயே
பாதயெல்லாம் ஒன்னதாண்டி
பாவிமனம் நினைச்சிருக்கு
பாத்துகிட்டே போனாயென்ன
மாமனென்னு ஒரு தடவை..

கண்ணோட உறவாடும் மையும்
காதோட கத சொல்லும் கம்மலும்
காரிகை ஓஅழக
கதை கதையா சொல்லுதடி...



தெத்திப்பல்லு மறஞ்சிதெரிய
கத்திக்கீசும் ஒஞ்சிரிப்பும்
காலோடு கானம்பாடும் ஓங்கொலுசும்
தேரேறி பறையடிக்கும்
தேவத நீதான்னு....
கலர்கலரா கைவளையல்
கலகலன்னு சிரிக்கையில
கண்மணியே ஒன்நினைப்பு
மண்ணோடு போயிருமா..?

கொழுந்தெடுக்க போகயிலே
கோதயவள் கட்டழக
கொளுத்தும் வெயிலும் தாங்கலயே
போதுமடி வந்துவிடு.....

இந்தப் பணம் தேவையில்ல
மாமனிருக்கேன் ஒனக்காக
மகாராணியா வச்சிருப்பேன்...

ஒத்த பொண்ணு தானேனு
மத்தவங்க நினைச்சிருந்தா
மெத்தையில படுத்திருப்ப...
பாவி அக்காள் நினைக்கலயே...

கரும்புருசி பாத்த எறும்பு
வரம்புமீறி வருமாபோல
கண்மணியே ஒம்மனச
கண்ணுக்குள்ள வச்சிருக்கேன்
காலம்பூரா தவமிருக்கேன்....

காலம் தாழ்த்தியது போதுமடி
கழுத்த கொஞ்சோ நீட்டிவிடு
கண்கலங்க விடமாட்டேன்
காலம் முழுசும் கைதியாவேன்
கட்டயில போறவர.....

கண்மணியே ஓங்காதல்
கட்டையிலும் கவி சொல்லும்
சங்கடம் தேவயில்ல
சலிக்காம காதலிப்பேன்
மாளிகை இல்லயின்னாலும்
சத்தியமா சொல்லுறேன்டி
சந்தோசமா வச்சிருப்பேன்...

சீக்கிரமா கட்டிப்புட்டா நீயென்ன
நமக்குன்னு நாலுபுள்ள
ஞாலத்தில பெத்தெடுப்போ.....!

மிதுஷா செல்வராஜா
மொழிபெயர்ப்புக்கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்.



# சட்ட விழுமியம்

கதிர்தர்சினி பரமேஸ்வரன்
சட்டத்துறை மாணவி
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

சட்டம் மற்றும் விழுமியம் இரண்டும் மிக சராசரியான வார்த்தைகள். சட்டம் எல்லோருக்கும் பொதுவான ஒரு விழுமியத்தை சொல்கிறது என்று கொள்வோம். ஆனாலும் விழுமியம், தனிநபர்களின் கொள்கைகள் வாழ்வை எதிர்நோக்கும் விதம், கோட்பாடு, குடும்ப பின்னணி, வாழ்க்கைமுறை, மற்றும் அறிவு என பல காரணிகள் பாதிக்கப்படுவதால் ஒவ்வொன்றும் முற்றிலும் மாறுபட்ட மட்டங்களில் இருப்பதைக் காணலாம்.

இலகுவாக விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால் ஒரு மனிதரைப் போன்றே உயிருள்ள அனைத்தின் மீதும் அன்பு காட்ட நாம் ஒவ்வொருவரும் வேறுபட்ட அளவுகோல்களை வைத்துள்ளோம். சிலர் ஜீவகாருண்யம் என்பது



மிருகங்களை உயிரோடு துன்புறுத்தல் கடின வேலைகளை செய்ய வைத்தல் மற்றும் பரிசோதனைகளுக்காக பயன்படுத்தல் என்பன தடுக்கப்படல் வேண்டும் என்றே கருதுகின்றனர். இன்னும் சிலர் கொல்லப்படுதல் தடுக்கப்பட வேண்டும் என்கின்றனர். இன்னும் சிலர் செல்ல பிராணிகளாக வளர்க்கப்படும் போதே சில நியமங்களை பின்பற்ற வேண்டுமென கருதுவதையும் காணலாம்.

இன்னும் தெளிவாகச் சொல்வதானால் கன்றுக்காக தாய்ப்பசு சுரக்கும் பாலை குடிப்பது ஒரு தவறான செயல் என விமர்சிப்பவர்கள் உள்ளனர். இதே இன்னும் சிலர் பாலைப் பெறுவதில் தவறில்லை ஆனால் பசுவைக் கொல்வது தவறு என்றும் இன்னும் சிலர் உணவுத் தேவைக்காக பசுவைக் கொல்வதற்கு ஒரு நியாயம் உண்டு என்றும் வாதிப்பர். அப்படிப்பட்டவர்களின் கண்களுக்கு பசுவை அடித்து துன்புறுத்துவதும் பரிசோதனை ஊசிகள் போடுவதும் மரபணு மாற்றம் செய்வதும் தவறு என தோன்றுகிறது. ஆகவே இங்கு ஒவ்வொரு செயலுக்குப் பின்னாலும் பல நியாயங்களும் சில நியாயமின்மைகளும் இருக்கக் காண்கிறோம். என்னுடைய கண்களிலே பாரதூரமான தவறு என்று தோன்றுகின்ற ஒரு விடயம் உங்களின் கண்களிலே மிகச் சாதாரணமாகத் தோன்றலாம்.

அப்படியானால் நியாயங்கள் எங்கிருந்து பிறக்கின்றன? எல்லோருக்கும் இது சரி இது



தவறு என நாம் ஒரே சட்டத்தையே பாவிக்க முடியுமா? கொஞ்சம் உங்களை பின்னோக்கி அழைத்து போக நினைக்கிறேன்.

சில விடயங்கள் நமக்கு நியாயமாக தோன்றியது ஆனால் இன்றைக்கு அவற்றை கடந்து நிறையத் தூரம் பயணம் செய்திருக்கிறோம். நரபலியை எடுத்துக்கொண்டால் ஒரு காலகட்டத்தில் புனிதமான சடங்காக இருந்தது பின்னர் தவறாக கருதப்பட்டு கொலை என்கின்ற நிலையில் வந்து நிற்கிறது. ஆனால் தனி மனிதனின் இறப்பு கொலைக்கு காரணமென்றாலும் கொலை நிகழும் இடம், சந்தர்ப்பத்தைப் பொறுத்து நாம் பல நியாயங்களைக் கற்பிக்கிறோம். தன்முனைப்பாக நாடுகளின் போரில் ஈடுபடும் போர்வீரர்களின் கொலை மரணமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் போரில் பங்குபற்றாத மக்களின் இறப்பு மாத்திரமே கொலையாக பார்க்கப்படுகிறது. தற்காப்பை முன்னிறுத்தி ஒருவன் செய்யும் முயற்சி கொலைக்குற்றத்தினை குறைப்பதற்கான எதிர்வாதமாகவே பார்க்கப்படுகிறது.

ஆகவே விழுமியம் என்பது காலம் இடம் ஏதுக்களைக் கொண்டு கணிக்கப்படுகிறது.

விழுமியம் என்பது தனி நபர்களின் தனிப்பட்ட சிந்தனைகளின் மேலே கட்டமைக்கப்படுகிறது. அப்படியானால் சட்டம் எப்படிப்பட்ட ஒரு நியாயம்? அது ஒரு பொதுமைப் படுத்தப்பட்ட அடிப்படை நியாயம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக சட்டத்தை பின்பற்றி நடந்தால் நாம் அனைவரும் நல்ல விழுமியமுடைய மனிதர்கள் என்ற எடுகோள் மிகப்பெரிய தவறு ஏனெனில் சட்டம் ஒரு அடிப்படை அளவுகோல் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டால் இந்த சட்டத்தை பின்பற்றி நடக்கின்ற சமூக விழுமியக்கேடுகளை எங்களால் தடுக்க முடியும். ஆனால் விழுமிய மட்டத்தை உயர்த்த முடியாது. ஆகவே மனிதத்தை உயர்த்தும் நோக்கில் செயல்படும் மனிதர்கள் சட்டத்தை தாண்டிய விழுமிய பெறுமானத்தை பின்பற்ற வேண்டிய தேவை உள்ளது. இவை கலாசார பெறுமானங்கள் மூலமே கட்டமைக்கப்படும்.



ரஞ்சிதா

# முடிவுறாக் கொட்டுக்கள்



(சென்ற இதழின் தொடர்ச்சி...)

“பழனி அண்ணே! எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல. நா சொல்லுற ஆறுதல் மீனா அக்காவ உயிரோட கொண்டு வரப்போறதில்ல. நா இப்போ சொல்லப் போறத ஆறுதல்னு நீங்க நெனச்சாலு சரி! ஆற்றாமையினு நெனச்சாலு சரி! ஆனா ஒண்ணு இந்த தேன் பூச்சிக் கொட்டு இன்னிக்கி நேத்து நம்ம தொழிலாளிங்க உயிர வாங்கல. காலங்காலமா நடந்துக்கிட்டு இருக்குற அக்கிரமம் இது! போன வருசோ நம்ம முத்து அண்ணே கவ்வாத்து வெட்ட போயி ஆசுபத்திரியில மூணு நாலு பதிஞ்சிருந்து செத்து போனாறு. நம்ம மேட்டு லயத்து குப்பாயி அக்கா தேன்பூச்சி கொட்டு வாங்கி பயத்துல இப்ப தோட்ட வேலைக்கு போறதில்ல. நம்ம பின்ரோட்டு பூசாரி மவே சுப்பு புல்லுவெட்ட போயி தேன்பூச்சிக்கு பலியாகிட்டா. இண்ணிக்கி நம்ம மீனாட்சி அக்கா. நாளைக்கி யாரோ??......??....... மூணு மாசத்துக்கு மொதல்ல யாரோ ஒரு மந்திரிவாறாருனு நிர்வாகத்து ஆளுங்க தேன்பூச்சிக் கூடுகள எரிச்சாங்க. இது அவுங்க பாதுகாப்புக்கா? இல்லாட்டி நம்ம பாதுகாப்புக்கா? நாம சாதாரணத் தொழிலாளிங்கதா. தோட்டக்காட்டானுங்கதா. பஞ்சம் பொழைக்க வந்தவுங்கதா.. சுரண்டலுக்குப் பொறந்தவங்கதா. வசதிவாய்ப்பு இல்லாதவுங்கதா. ஒரு வேல சாப்பாட்டுக்கு வேலகாட்டுல கொழுந்து நிறுத்து தாற காசுல குடும்ப நடத்துறோ. ஒரு நாளு வேலைக்கு போவாட்டி பட்டினி! நேரம் பிந்தி போனா அரைப் பேரு! ஆனா ஒண்ணு பழனி அண்ணே! நாம உயிரோட இருந்தாதா நாட்டுக்கு பொருளாதாரோ ஓயரு! நம்ம தலைவருமாருங்க சொகுசா வாழுவாங்க! இந்த தேன்பூச்சி கூடுகள எடுக்க சொல்லி நாம எத்தன நாளு போயி தலைவருமாருககிட்ட சொன்னோ. ஒரு முடிவு இன்னுவரைக்கு எடுக்கல. நம்ம பாதுகாப்பா இல்லாட்டி??????...????”

தளதளத்த குரலில் கண்ணீர் மல்க கண்ணாயி கூறிய நியாயமான, எதார்த்தமான பேச்சுக்களை, வார்த்தைகளின் ஆழத்தை சிந்திக்க மறுத்து, ஏற்க மறுத்து, திடீரென வானத்தைப் பிளந்து கொண்டு வந்த இடி முழக்கமும் பூமியைத் தழுவிச் சென்ற மின்னலும், தெற்கு பக்கமிருந்து வீசிய புயல்காற்றும் அந்த மேகமலைத் தோட்டத்துக் காம்பராக்களின் தகரக் கூரைகளையும் பிளாஸ்டிக் பொருட்களையும் அதிரவைத்தது. ஆங்காங்கு உயர்ந்து நிழல் பரப்பி நின்ற கவ்வாத்து மரங்கள் சலசலத்தன. மீண்டும் மலைகளில் கருமுகில் கூட்டம் திரைக்கட்டி மழையை வரவேற்கத் தயாராகின. துக்கம் விசாரிக்க வந்த சனக்கூட்டம்

வேகமாக களைய ஆரம்பித்தது. வந்திருந்த அதிகாரிகள் மழையின் அரவணைப்பிலிருந்து விடுபட்டு தங்களது பங்களாக்களை நோக்கி விரைந்தனர். கண்ணா யியின் வார்த்தைகள் எவர் காதுகளுக்குள்ளும் புகுந்து கொள்ளாது காற்றுடன் சங்கமமாகியது.

தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் குளவிக்கொட்டிலிருந்து தம்மை பாதுகாத்து தர கூறி பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். ஊடகங்கள் அனைத்திலும் மீனாட்சியின் மரணம் பற்றியும் குளவிக்கொட்டுக்களிலிருந்து விடுதலைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பரபரப்பாக பேசப்பட்டது. பொருளாதாரத்தின் முதுகெலும்புகள் உடைந்துவிட்டால் தேயிலைச்செடிகள் துளிர்விடாது என்பதை அறிந்த முதலாளிகள் சபை கூடி பல கருத்துக்களை முன்வைத்தனர். மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் பெருந்தோட்ட கம்பனிகள் நடத்திய தீர்வு யுத்தத்தில் சில நடைமுறைகள் முன்வைக்கப்பட்டன. இரசாயனப் பதார்த்தங்களை பாவிப்பதைவிட இயற்கையான முறையில் குளவிக்கூடுகளை அழிக்க தோட்ட இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க தீர்மானிக்கப்பட்டது. தோட்ட மக்களுக்கு தகவல்கள் பரப்பப்பட்டது. தற்காலிகமாக தோட்ட நிர்வாகம் மண்ணெண்ணை, வெங்காயம், வாழை இலை சாறு (முதலுதவிக்காக பெரட்டு களத்தில் வைத்திருந்தது.) போன்றவற்றின் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இப்பொழுது அந்த தோட்டம் அனைத்தையும் மறந்து வழமைக்குத் திரும்பியது. தோட்ட கம்பனிகளும் தோட்ட நிர்வாகங்களும் தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி நடவடிக்கைகளில் மாத்திரம் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தன.
எங்கும் தேயிலைச் செடிகள் மீண்டும் துளிர்விட்டு நாட்டின் பொருளாதாரத்தை சுபீட்சமாக்க பனிப்போர்வைக்குள் மறைந்திருந்தன. தோட்டத் தொழிலாளர்கள் கொழுந்து பறிப்பதற்காக இடுப்பில் இறப்பர் சீட், சாக்கு கட்டிக்கொண்டு, முதுகில் யூரியா பேக்குகளுடன் மலைகளை நோக்கி விரைந்தனர். களைந்திருந்த குளவிக் கூடுகள் நியாயமற்ற பழிவாங்கல்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மீண்டும் முடிவுறாத கொட்டுக்களை வழங்க அந்த மேகமலைத் தோட்டத்தின் இலுப்பை மரங்களிலும், சிறுவர் பராமரிப்பு இல்லங்களிலும், தேயிலைச் செடிகளுக்குள்ளும் தஞ்சம் புகுந்து கொண்டன.



சிந்தனைக்கினிய

# கந்தபுராணம்

அதிரன்

> "இந்திராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவிச்
> சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர்
> அந்திமில் அவுணர் தங்கள் அடல் கெடமுனிந்த செவ்வேள்
> கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே"

இப்பாடல் "முருகப்பெருமானின் திருவரலாறாகிய கந்தபுராணத்தைக் காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர், நினைப்போர் யாவரும் இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து இறுதியில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர்" என்று நூற்பயனை விதந்து உரைக்கிறது.



கி.பி 12, 13ம் நூற்றாண்டுகளில், தமிழகத்தின் காஞ்சியில், குமரகோட்டம் முருகன் ஆலய அர்ச்சகராகத் திகழ்ந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். முருகனே 'திகட சக்கர' என்று முதல் அடியெடுத்துக் கொடுக்க 10345 அருந்தமிழ்ச் செய்யுள்களால் கந்தபுராணத்தை அவர் ஆக்கியிருக்கிறார்.

'உபதேச ரத்னாகரம்' என்று போற்றப்படும் கந்தபுராணம் காப்பிய இலக்கணங்கள் மிக்கதாக, சித்தாந்தக் கருத்துக்களின் செறிவுடையதாக, தத்துவார்த்த உண்மைகள் பொருந்தப் பெற்றதாக அமைந்திருக்கிறது. தமிழ்க் கந்தபுராணத்தின் தமிழ் நடையும் வியந்து நயந்து உண்ண வேண்டியது.

பெருமை மிக்க இப்புராணத்திலுள்ள ஆறு பெரிய சங்கிதைகளுள் ஒன்று சங்கரசங்கிதை. இச்சங்கிதையிலுள்ள பதின்மூன்றாயிரம் சுலோகங்களால் ஆக்கப்பெற்றது சிவரஹஸ்ய காண்டம் என்ற உயர்ந்த பகுதி. இதில் ஏழு காண்டங்கள் உள்ளன. அவ்வேழு காண்டங்களுள் முதன்மையான ஆறு காண்டங்களை இணைத்து அழகுத் தமிழில் 'கந்தபுராணம்' என்ற ஞானக்களஞ்சியமாக தந்திருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

முருகப்பெருமானாலேயே ஆணையிடப்பெற்று, அவனாலேயே தினமும் பரிசீலனை செய்யப்பெற்றது. ஆயினும், அரங்கேற்றத்தில் அறிஞர் முன்றலில் இலக்கணச் சந்தேகம் உண்டானது. அப்போது கந்தவேட் பெருமானே சிறுவடிவு தாங்கி வந்து, தன்னால் அங்கீகரிக்கப்பெற்ற நூல் அது என்று யாவரும் அறிய சந்தேகம் நீக்கினார். மிகத் தெளிவாக 'இறையாணை' பெற்ற நூல் கந்தபுராணம் என்பது சைவத்தமிழ் மக்களின் நம்பிக்கை.

கந்த புராணம் அரியதொரு தத்துவப்புதையல். இப்புராணத்தின் ஒவ்வொரு நிலையிலும் இதனை உணர்ந்து அனுபவிக்க வேண்டும். கந்தன் இளமையின் வடிவம். ஆற்றலின் நிலையம். என்றும் இளையான், எவர்க்கும் மிகப்பெரியான், என்றும் அழகியான் என்று சநாதன தர்மம் போலவே விளங்குபவன் அந்தக் கந்தன் என்ற முருகன். அவனது மனைவியராகப் புராணம் இரு தேவியரைக் காட்டும். அவளுடைய வலது பக்கம் விளங்குபவள் வள்ளி. அவள் இச்சா சக்தி. மண்ணுலகில் பிறந்து வளர்ந்தவள். தமிழ்மகள். வேடுவனான நம்பிராஜன் புதல்வி. அத்தேவி இகலோக சுகத்தைத் தருவாள். அத்தேவியை முருகன் காந்தர்வ விவாகம் செய்து கொண்டான்.


முருகனின் இடது பக்கம் எழுந்தருளுபவள் தேவசேனா. விண்ணுலகில் பிறந்தவள். தேவராஜனின் புதல்வி. கிரியாசக்தி. அவளை இறைவன் கற்பு முறையில் பிரம்ம விவாகம் செய்தான். முருகனை வழிபடுவோருக்கு அத்தாய் பரலோக வாழ்வில் இடம்தருவாள். முருகனின்





மூன்றாவது சக்தி வேல். முருகனின் கரத்தில் விளங்குகிறது. வெற்றியைத் தருவது. ஞானமே வடிவெடுத்த ஞானசக்தி அது. 'வெல்' என்ற வினையடியில் தோன்றியது 'வேல்'. அது ஞானமே உருவானது. ஆழ்ந்து அகன்று கூர்மையாகி அறிவின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. செவ்வேட் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் சேவற்கொடி அஞ்ஞான இருளகற்றி ஞானஒளி வரக் கூவுகிறது. (கொக்கு- மாமரம், அற- அறுத்த, கோ- நம் அரசே) வாகனமான மயில் ஆசை என்ற பாம்பை அடக்கி பிரம்மசக்தியாக ஓம்கார ஸ்ரூபமாக விளங்குகிறது.

(சமஸ்கிருதத்தில் பதினெண் புராணங்கள் உள்ளன: சைவம், பவி'யம், மார்க்கண்டேயம், லிங்கம், ஸ்காந்தம், வராஹம், வாமனம், மத்ஸயம், கூர்மம், பிரம்மாண்டம், காருடம், நாரதீயம், வை'ணவம், பாகவதம், பிரம்மம், பத்மம், ஆக்னேயம், பிரம்மகைவர்த்தனம் என்பவற்றுள் ஸ்கந்தபுராணம் என்ற மகாபுராணமும் ஒன்று.)






சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

### இடமிருந்து வலம்

1- கூகிள் நிறுவனத்தின் தற்போதைய முதன்மைச் செயல் அதிகாரி.
5- சிறைவாசம் செய்பவன்.
7- இராம பிரானின் தந்தை.
10- கோள் (குழம்பி)
11- பதவி வரும் போதே இதுவும் வரவேண்டும் என்பர்.
12- செல்வம் (குழம்பி)
15- கருணை (திரும்பி)
17- இவை மொத்தமாக அறுபத்து நான்கு உள்ளனவாம்.
19- நா நீரினைத் தேடும் நிலை (குழம்பி)
20- விளம்பி நாகனார் எழுதிய ஒரு பதினெண் கீழ்க்கணக்கு நூல்.

### மேலிருந்து கீழ்

1- அழகு
2- ஓர் உலோகம்
3- தெய்வப் பெயர்களில் பிற்பக்கம் வரும் ஒரு சொல்.
4- சமிக்ஞை என்றும் சொல்லலாம்.
6- பொருளின் எடையை குறிப்பிடும் கணியம்.
8- பிரியமான தோழி
9- நெருப்பூட்டலை இப்படிச் சொல்வர்.
11- வெற்றியீட்டுபவர்களுக்கு கழுத்தில் அணிவிப்பது(குழம்பி)
13- விளைவு என்றும் சொல்லலாம். (குழம்பி)
14- புதல்வன்
16- ஒரு விலங்கு (குழம்பி)
18- வானாளாவ உயர்ந்து நிற்பது (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப்போட்டி - 23 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | று | 2 தி | ரு | 3 மு | 4 ரு | க | 5 ன் |
| த | | ரு | | 6 ழி | வ | | தீ |
| 7 வ | 8 லை | கோ | 9 ன் | | 10 க | ன | வு |
| 11 ன் | வ | ணை | மா | | ம் | | லா |
| | 12 ன் | ம | த | 13 த் | உ | | அ |
| 14 க | | 15 லை | வ | க | | 16 எ | |
| 17 டு | 18 ம | | | 19 த | 20 ரு | ம | 21 தி |
| 22 கு | ண் | டு | சி | | 23 கு | ன் | க |

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில்

# கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

முருகையா சதீஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## ஆய்வுச்சுருக்கம்

பி.ஆர்.ராஜமய்யர் அவர்களால் எழுதப்பட்ட கமலாம்பாள் சரித்திரம், இலக்கிய வடிவமும், நடையழகும், தீவிரமும், பாத்திரங்களின் அதீதமற்ற காட்சியோடு கூடிய முழுமையான நாவல் ஆகும். தத்துவ வீச்சோடும், கச்சிதமான உருவ அமைப்போடும் அமைந்து, நாவல் என்ற இலக்கிய வடிவத்திலும், திறனாய்வு அடிப்படையிலும் தமிழின் முதல் நாவல் என்ற தகுதியைப் பெறுகிறது.

கதையமைப்பில் மிகுந்த தனித்தன்மை கொண்டது. இன்றுவரையும் கருவினால் இதற்கு இணையாகப் பேசக்கூடிய மற்றொரு நாவல் எழுதப்படவில்லை. எளிய நடையில் முற்றிலும் சமகால வாழ்வின் சிக்கல்களாலும், மெலிதான நகைச்சுவை மற்றும் கதைப்பின்னலாலும் அமைத்துள்ளார்.

அக்காலத்து நிலமானிய சமூக நடைமுறைகளையும், நிலமானிய சமூகத்தில் கூட்டுக்குடும்பங்கள் சிதைந்து போகின்ற நிலையையும் இந்நாவலில் பார்க்க முடியும். அதுமட்டுமன்றி அக்காலப் பெண்களின் மனப்போக்கு, அக்காலச் சமூகநிலை, குடும்பங்களின் பிரச்சினைகள், உறவுச் சிக்கல்கள், பிள்ளை வளர்ப்பு முதலான பல்வேறு விடயங்களை உணர்த்துவதற்கு யதார்த்த நெறி ராஜமய்யரால் கையாளப்பட்டுள்ளது.

எனவே இத்தகைய சிறப்புக்களோடு கூடிய "கமலாம்பாள் சரித்திரம்", தமிழ் நாவல் வரலாற்றில் எத்தகைய முக்கியத்துவத்தினைப் பெறுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எனவே தொடக்ககாலத்திலேயே உருவ, உள்ளடக்கத்தில் சிறப்புற்றுத்தோன்றிய நாவல் என்னும் பெருமையைக் "கமலாம்பாள் சரித்திரம்" பெறுகின்றது எனலாம்.

திறவுச் சொற்கள்:
தமிழ்நாவல் வரலாறு, பி.ஆர். ராஜமய்யர், கமலாம்பாள் சரித்திரம், முக்கியத்துவம்.

## ஆய்வுநோக்கம்

நாவல் என்ற இலக்கிய வடிவத்திலும், திறனாய்வு அடிப்படையிலும் தமிழின் முதல் நாவல் என்ற திறனாய்வாளர்களின் கருத்தினை மெய்ப்பிக்கும் இந்நாவல், தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பெறும் வகிபங்கு எத்தகையது? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இவ்வாய்விற்கு, முதலாம் நிலைத் தரவாகக் "கமலாம்பாள் சரித்திரம்" பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இரண்டாம் நிலைத்தரவுகளாக இந்நாவல் சார்ந்த கட்டுரை நூல்கள், சஞ்சிகைகள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## அறிமுகம்

உரைநடையில் எழுதப்படுகின்ற நீண்ட கதை கூறும் இலக்கியமாக நாவல் அமைகின்றது. வாழ்க்கையும், வாழ்க்கை பற்றிய நிகழ்வுகளும் உரைநடையில் எழுதப்படுமேயானால் அது நாவலாகும். "புதுமை" என்ற பொருளைத் தரவல்லது நாவல் இச்சொல் 'novela' என்ற இத்தாலிய மொழிச்சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது. இது மேற்குலகில் நிலமானிய சமுதாய அமைப்பின் சிதைவிற்குப் பின்னர் தோன்றிய முதலாளித்துவ சமுதாய அமைப்பின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட இலக்கிய வடிவமாகும். பின்னர் ஐரோப்பியரின் கீழைத்தேய வருகையைத் தொடர்ந்து உரைநடையின் வளர்ச்சியாகத் தமிழிலும் நாவல் இலக்கியம் தோற்றம் பெற்றது.




தமிழ் நாவல் வரலாற்றில் "பிரதாபமுதலியார் சரித்திரம்" வேதநாயகம் பிள்ளையால் முதலில் எழுதப்பட்டது.

ஆனாலும் நாவல் என்ற இலக்கிய வடிவத்திலும், திறனாய்வு அடிப்படையிலும் முதல் நாவல் என்ற தகுதியைப் பெற வேண்டியது ராஜமய்யரின் "பிரதாபமுதலியார் சரித்திரம்" என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே இத்தகைய "கமலாம்பாள் சரித்திரம்" எனும் நாவல் தமிழ் நாவல் வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்மாதிரியாக அமைந்த நாவல்

"கமலாம்பாள் சரித்திரம்" இலக்கிய வடிவமும், நடையழகும், தீவிரமும் பாத்திரங்களின் அதீதமற்ற வண்ணங்களும் கூடிய முழுமையான நாவல். தமிழில் நாவல் இலக்கியத்தின் முன்மாதிரியாக அமைந்த இந்தநாவல் இத்தனை அழகோடும், தத்துவ வீச்சோடும் கச்சிதமான உருவ அமைப்போடும் அமைந்தமை சிறப்புக்குரியது. நாவல் என்ற இலக்கிய வடிவத்திலும், திறனாய்வு அடிப்படையிலும் தமிழின் முதல் நாவல் என்ற தகுதியைப் பெற வேண்டியது இந்நாவல் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## நாவலின் நோக்கம்

ராஜமய்யர் பொய் என உலகத்தை நம்புவதால் தனது கதையையும் பொய்யாகவே காண்கிறார். இவரின் தத்துவம் அகவயமானதாகும். சமூகச்சிக்கல்களுக்குச் சிந்தனை அளவிலேயே தீர்வு காண முயல்கிறார். கடவுளைக் காணும் அகவாழ்வே இவருக்கு முக்கியமாகப்படுகின்றது. "இவ்வுலகில் உளன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா, பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கடைசியாக நிர்மலமான ஒரு இன்பநிலை அடைந்ததை விபரிப்பதே இந்த நவீனத்தின் முக்கிய நோக்காகும்." என்று ராஜமய்யர் தன் சொந்த மொழிகளில் குறிப்பிடுகின்றார்.

*ஆய்வு தொடரும்...*

# மாதவிடாய் நிறுத்தம்

GOLDEN Z club ZONTA

- மாதவிடாய் நிறுத்தம் என்பது உங்கள் மாதவிடாய் சுழற்சியின் முடிவைக் குறிக்கும் நேரம்
- இது ஒரு இயற்கையான விடயம். ஆனால் சூட்டுத்தன்மை மற்றும் மன ரீதியான அறிகுறிகள் போன்றவை உங்கள் தூக்கத்தை சீர்குலைக்கலாம், உங்கள் வலுவை குறைக்கலாம் அல்லது உணர்ச்சி ஆரோக்கியத்தை பாதிக்கலாம்
- உங்கள் கருப்பைகள் முட்டைகளை வெளியிடுவதை நிறுத்தும்போது அல்லது உங்கள் கருப்பைகள் அகற்றப்பட்டு உங்கள் உடலில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனின் அளவு வீழ்ச்சியடையும் போது இது நிகழ்கிறது
- நீங்கள் மாதவிடாய் இல்லாமல் 12 மாதங்கள் சென்ற பிறகு இது கண்டறியப்படுகிறது

## அறிகுறிகள்

மிகவும் பொதுவான அறிகுறிகள்:

- சூட்டுத்தன்மை
- இரவு வியர்வை
- யோனி வறட்சி
- தாழ்வான மனநிலை / கவலை
- உடலுறவில் ஆர்வம் இழப்பு





## சிக்கல்கள்

மாதவிடாய் நின்ற பிறகு, சில நோய்களுக்கான ஆபத்து அதிகரிக்கிறது.

அவை பின்வருமாறு:

- இருதய நோய்
- என்பு தேய்வு
- சிறுநீர் கசிவு
- எடை அதிகரிப்பு



# சித்திராங்கதா

27

காவ்யமோகன்

## அதிசயம் நிகழ்த்த வேண்டும்

நல்லூர்க்கோட்டையின் மேற்கு வாசலை நோக்கி தொலைவில் வந்து கொண்டிருக்கிறது ராஜமந்திரியாரது ரதம். வீரமாகாளி கோயில் வாயிலில் நின்று கொண்டு அந்த ரதத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்த வருணகுலத்தானிற்கு அது மந்திரியாரது ரதம் என இனங்கண்ட நொடி கொஞ்சம் ஏமாற்றத்தையே கொடுத்தது. ஆனால் அந்த ரதத்தை பார்த்தபிறகு தான் ஒரு புதிய யோசனை வருணகுலத்தானிற்கு தோன்றியது.

இந்த தருணத்தில் அரங்கேற்ற விழா நடந்தேறுவதற்கு மந்திரியார் மனம் வைத்தலே அவசியம் என உணர்ந்தான். அதற்காக தன்னால் ஆன சிறுமுயற்சியை தொடங்கியாக வேண்டும் என கணநேரத்தில் யோசித்தான். பல யோசனைகளையும் திட்டங்களையும் எண்ணியே ராஜமந்திரியார் முடிவு மேற்கொண்டிருப்பார் என்று தெளிவாய் அறிந்திருந்தும் சித்திராங்கதாவிற்காக அதனை மாற்றியமைக்க மந்திரியாரிடம் விண்ணப்பம் கோருவதற்காய் முன்னேறத் தயாரானான்.

ஆனால் அந்த ரதம் அவனிற்கு மீண்டும் ஏமாற்றத்தையே கொடுத்தது. கோட்டை வாசலிற்கு வந்துவிட்ட ரதத்தில் இராஜமந்திரியார் இருக்கவில்லை. ரதசாரதி மட்டுமே ரதத்தை செலுத்திக்கொண்டு கோட்டை நோக்கி வந்திருக்கிறான். திட்டமிட்டதை நிறைவேற்ற முடியாத வெறுப்போடும், தன் கண்களை தவிர்த்து விலகியோடிப்போன சித்திராங்கதாவின் அந்தத் குனிந்த வதனம் உள்ளத்தில் கிடந்து உண்டாக்கும் அளவிலா வேதனையோடும் அவன் உற்சாகமிழந்து மந்திரி மனை நோக்கிச் சென்றான்.

மனையிலே தன் அறையில் அமைந்திருந்த அந்த வட்டவடிவமான சாளரத்தின் வழியே தெரிந்த கோட்டையின் நெடுஞ்சுவர்களை நோக்கிய வண்ணம் அவன் தீரா யோசனையில் தன்னோடு பேசிக் கொண்டிருந்தான்.

“தஞ்சை ரகுநாத நாயக்கரின் ஆணைக்குக் கட்டுப்பட்டே ஈழம் வந்தேன். வந்த இடத்தில் ஏதும் வழி தவறி நடக்கின்றேனா?

என் கடமைகளை ஆற்ற விடாது பெருந்தடையாய் நின்று இப்படி உள்ளத்தை வாட்டுவது எது? ஈழத்தின் அரச முடிவொன்றையே மாற்றுவதற்கு கோர தயாராகிவிட்டேனே? எதற்கு? எந்த வகையில் இது தகும்? முறையற்ற செயலை அல்லவா செய்யத் துணிந்து விட்டேன், இதற்கு என்னிடம் என்ன நியாயம் இருக்கிறது? இல்லையே, எதுவும் இல்லையா? இருக்கிறது தானே,

சித்திராங்கதாவின் வாட்டத்தைப் போக்கத்தானே எண்ணம் கொண்டேன். அவளது வேதனையும் நியாயமானதன்றோ?

அரங்கேற்றம் மீது அளவில்லாக் கனவு கொண்டிருந்தவள் எனக்காகத்தானே அரங்கேற முன்னமே மேடை ஏறினாள். அந்த அரங்கேற்ற விழாவை நடத்தியாக வேண்டியதில் என்னுடைய கடமையும் இருக்கிறதல்லவா?


நான் என்னுடைய இக்கடமையை ஆற்றத் தவறிவிட்டேன் என்றுதானே இப்போது அர்த்தம். அதனால்த்தானே என்னை நிமிர்ந்து நோக்க மறுத்து என்மீதான நம்பிக்கையிழந்து விலகிச் சென்றுவிட்டாள்."

என்று அவன் எண்ணக் கோலங்கள் நீண்டு கொண்டே போயின.

"தளபதியார் பார்வையாலேயே கோட்டைச்சுவர்களை இடித்து விடும் புதிய வித்தை ஏதும் முயற்சிக்கின்றாரோ?"

என்று தன் பின்னால் ஒரு பெண்குரல் கேட்டு சுயநினைவு பெற்றான் வருணகுலத்தான்.

"வாருங்கள் தேவி!"



திவாகரன்

மாருதவல்லி வந்திருந்தாள்.

"என்ன, தளபதியார் ஏதோ தீவிர சிந்தனையில் மூழ்கிக் கிடப்பது போல் தெரிந்தது. என் பங்கிற்கு நானும் கொஞ்சம் குழப்பிவிடலாமே என்று வந்தேன்." என்று கூறிச்சிரித்தாள் மாருதவல்லி.

"அதற்கென்ன தேவி தங்களால் முடிந்ததைத் தாராளமாய்ச் செய்யுங்கள். ஆனால் தங்களை இப்படி சிரித்த முகத்தோடு பார்த்து நாட்களாகிவிட்டன என்று அரண்மனையில் எல்லாருமே பேசிக்கொண்டிருந்தனர். தங்களை மீண்டும் இந்த மலர்ந்த முகத்தோடு பார்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது தேவி"

"உண்மைதான் தளபதியாரே,

அந்தக் கொடிய சம்பவத்திலிருந்து நான் என்னை முழுமையாக மீட்டெடுக்க முடியவில்லை. அநாவசியமான பேராசைகளை மனதில் வளர்த்துக் கொண்டதால் நான் பெற்ற பரிசு எனக்குப் பெரிய பாடத்தை புகட்டிவிட்டது. ஏதோ தங்களால்த்தானே இன்று உயிர் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்."

"அப்படிச் சொல்லாதீர்கள் தேவி, தங்களின் துணிச்சலான செயலினாலே எமக்கு மிக்கபிள்ளையை சிறைபிடிப்பது அனுகூலமாய் முடிந்தது. எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் இருக்கிறதல்லவா? இதில் தங்கள் தவறு என்று சொல்ல என்ன இருக்கிறது? வீண் யோசனையை விடுங்கள் தேவி"

"என் தவறும் இருக்கிறது தளபதியாரே. மகாராணி நானாவேன் என்கிற அர்த்தமற்ற கற்பனைகளாலான ஆசைகளை உள்ளத்தில் வைத்துக் கொண்டு அலைந்தவள் நான்தானே. சிறு வயதில் மகாராணி மஞ்சரிதேவி என்மீது காட்டிய கரிசனையை கருதி நானே அடுத்த மகாராணி என்று எண்ணிக் கொண்டேன். காலஞ் சென்றபின் அது சாத்தியமேயில்லை என்று உண்மை புரிந்தும் ஏனோ அதை ஏற்க மறுத்து மகாராணி நானே எனும் எண்ணத்திலே திரிந்தேன். அந்த எண்ணம் என்னை இப்படி ஒரு ஆபத்துப்பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று நான் ஒரு கணம் கூட நினைத்துப்பார்க்கவில்லை."

உறுதியான குரலோடு மாருதவல்லி வெளிப்படையாகப் பேசியது வருணகுலத்தானிற்கு ஒரு புரிதலை உண்டுபண்ணியது. நடந்த முடிந்த சம்பவங்களால் அவள் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

"தேவி, நடந்தவை எல்லாமே நல்லபடியாகத்தான் நடந்திருக்கிறது. மிக்கபிள்ளை போன்றவனின் முடிவு தங்களால் நிகழ வேண்டும் என்பதே விதி போலும். இதற்காக தாங்கள் வருத்தம் கொள்ளத் தேவையில்லை. முடிந்தவை முடிந்தவையாகவே இருக்க இனி தாங்கள் மகிழ்வாய் இருங்கள் தேவி" என்றான் வருணகுலத்தான்.

"நன்றி தளபதியாரே! பார்த்தீர்களா? தாங்கள் ஏதோ சிந்தனையில் இருக்கிறீர்கள் என்று பேச வந்து என் கதையைக் கூறிக் கொண்டிருக்கிறேன்."

"அப்படியொன்றும் இல்லை தேவி . என் சிந்தனையெல்லாம் யுத்தகளம் பற்றியதே. அது எப்போதுமே என் சிந்தையில் உடன் இருந்து கொண்டுதான் இருக்கும்."

"நான் மனந்திறந்து தங்களிடம் உண்மைகளைக் கூறினேன். நீங்கள் என்னை நம்பவில்லை என்று நீங்கள் சொல்கிற பொய்யே எடுத்துக்கூறுகிறது அல்லவா?"

"அப்படியில்லை தேவி!" என்று கூறியவனால் அதற்கு மேல் பேச

முடியவில்லை. தன் வேதனையை மாருதவல்லியிடம் பகிர்ந்து கொள்வது ஏனோ ஆறுதலாய் இருக்கும் என அந்நேரம் வருணகுலத்தானிற்கு தோன்றியது.

“பிறகு எப்படித் தளபதியாரே? கூற விருப்பம் இல்லாவிட்டால் கூறத் தேவையில்லை. இந்தச் சிறு பெண்ணால் தங்களிற்கு என்ன உதவமுடியப் போகிறது.”

“கூறுகிறேன் தேவி!..
தாங்கள் இந்த ஈழவளநாட்டின் நாட்டிய வித்தகி சித்திராங்கதாவை அறிவீர்களா?”

“அறியாமல் இருப்பேனா? கூறுங்கள் தளபதியாரே”

கூறினான். எல்லாவற்றையும் கூறினான். தன் மனதின் ஓரங்களில் தேக்கி வைத்த வார்த்தைகளை எல்லாம் முதன் முதலாய் இப்போதுதான் ஒரு சக மனிதரிடம் அவன் கூறுகிறான். தன் உள்ளத்தின் மொழிகளை எல்லாம் அவன் மாருதவல்லியிடம் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தான்.

தன் பார்வையை விலக்கி அவள் சென்ற விதத்தை கூறுகையில் தான் அவன் குரல் மெல்ல உடையத் தொடங்கியது.

“புரிகிறது தளபதியாரே,” என்று கூறி தானும் மௌனமானாள் மாருதவல்லி.

சிறிது நேரம் கழித்துத் தொடர்ந்தாள்.

“நான் வேண்டுமென்றால் தந்தையிடம் வேண்டுகோள் விடுக்கவா? என் சொல்லை தந்தை மறுக்கமாட்டார் என்று கருதுகிறேன்.”

“இல்லை தேவி, மந்திரியார் வேண்டுமென்றே இதைத் திட்டமிட்டுச் செய்யவில்லை. அவர் பல விடயங்களை கருத்திற் கொண்டே திட்டம் தீட்டியிருப்பார்.”

“உண்மைதான் தளபதியாரே, ஆனால் வன்னியர் விழாவிற்கு குறிக்கப்பட்ட நாளில் தானே சிக்கல் உருவாகியுள்ளது. அதனை மாற்றுவதற்கு கோருவதில் தவறேதுமில்லையே. தந்தை மன்னரைச் சந்திப்பதற்காக சென்றிருக்கிறார். வந்தவுடன் நான் இது குறித்து அவரிடம் வினவுகிறேன்.” என்றாள் மாருதவல்லி.

“என்ன ? மந்திரியார் மன்னரைப் பார்க்கச் சென்றுள்ளாரா? அவர் இவ்வேளை கோப்பாய் மாளிகையிலல்லவா இருக்க வேண்டும். இன்று மாலையில்த் தானே என்னை சந்திக்க அங்கு வந்திருந்தார். அத்தோடு அவரது ரதம் கூட இப்போதுதானே கோட்டைக்குள் வந்தது. அதில் கூட மந்திரியார் வரவில்லை. பிறகு எப்படி?”

“என் தந்தை எப்போது எங்கிருப்பார் என்று யாராலும் கூற முடியாது. அதுதான் அவரது பெருந்திறமை. ஆனால் இப்போது சில நாழிகைக்கு முன் தான் மன்னரைச் சந்தித்து வருவதாய் கூறி மனையிலிருந்து

வெளியேறினார். அவர் மன்னரைச்சந்தித்து விட்டு வந்ததும் நான் இது குறித்து தந்தையிடம் வினவுகிறேன். நீங்கள் கவலை விடுங்கள் தளபதியாரே”

“எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை தேவி, என் சிந்தை தெளிவில் இல்லை. எல்லாம் குழப்பமாகவே இருக்கிறது. தாங்கள் கூறுவது போல் நடந்தால் உண்மையில் பெரு மகிழ்ச்சியே”

சிரித்தாள் மாருதவல்லி.

“நிச்சயமாக தளபதியாரே!”

“மகாராணி நினைத்தால் முடியாததா?” என்று கேளிக்கையாய்ச் சொன்னான் வருணகுலத்தான்.

“ஐயையோ.. வேண்டவே வேண்டாம். நான் விடைபெறுகிறேன் தளபதியாரே” என்று கூறிச் சிரித்தபடியே வெளியேறினாள் மாருதவல்லி.

தான் ஆற்றுகிற காரியம் சரி தவறு என சிந்திக்கும் எல்லையைத் தாண்டி விட்டிருந்தான் வருணகுலத்தான். எப்படியாவது அரங்கேற்ற விழா உரிய நாளில் நிகழ ஏதாவது அதிசயம் தன்னால் நிகழ்த்த முடியுமா என்கிற சிந்தனையிலே அவன் இருந்தான்.

காண்போம்...



# 3.47 வினாடிகள் தொடக்கம் முடிவில் வரை

**அட்டைப்படம் சொல்லும் கதை**

**புகைப்படப்பிடிப்பாளர்:~ வி. ரிஷிகேசவன்**

**புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் :~ தெல்லிப்பளை**



நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு. இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோமோ அப்படி நம்மை நாமே மாற்றிக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே உள்ளது.

என்னைப் பலரும் கையில் தூக்கி யிருக்கிறார்கள் அவர்களின் கையில் முதல் முதலில் நான் தவழும் போது நான் நானாகவே இருந்தேன். என் நிறங்கள் அனைத்தும் இருக்க வேண்டிய இடத்தில் சரியாக முழுமைபெற்றவனாக இருந்தேன். எனது வண்ணங்களை சுழற்றி சில மாறுதல்கள் என்னில் வந்த பின்னர் நான் நானாக இல்லை. எப்படியும் எனது வண்ணங்களை சரியாக்கும் முயற்சியில் பலரில் சிலரே வெற்றி பெறுகிறார்கள். அப்படி முயற்சி செய்யும் பலரும் முதலில் எனது 6 வண்ணங்களில் ஒன்றை இலகுவாக சரி செய்து விடுகிறார்கள்.

அதற்கு பின் அவர்கள் மிகுதி 5 வண்ணங்களை சரி செய்தாலே என்னை பழைய போன்று முழுமையடைய செய்ய முடியும். இங்கே தான் பலரும் சில தவறை செய்கின்றார்கள். என்னை சரி செய்யும் முயற்சியும் முடியாமல் போகின்றது. காரணம் நான் உங்கள் வாழ்கையை போன்றவன். அனைவரது வாழ்கையிலும் என் 6 வண்ணங்கள் போல் பல உறவுகள் மகிழ்ச்சிகள் சிக்கல்கள் உள்ளன. பலரும் என் வண்ணங்கள் போல் வாழ்க்கையை பார்ப்பதில்லை. பார்த்தால் அனைத்திற்கும் தீர்வு சில வினாடிகளில் பிறந்து விடும். ஆம்! என்னை 3.47 வினாடிகளில் தீர்த்தவர்களும் உண்டு.

ஒரு நிறம் சரியாகிய பின்னர் பலருக்கும் அந்த நிறத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கு மனம் வருவதில்லை காரணம் மீண்டும் நிறம் கலைந்துவிடும். ஆனால் மீண்டும் மாற்றம் அந்த ஒரு நிறத்தில் கொண்டுவந்து மிகுதி 5 நிறங்களையும் சரிசெய்யும் முயற்சியில் இறங்கினால் என்னை சரி செய்ய முடியும். ஒன்றை சரி செய்தவர்களுக்கு என்னை முழுமையாக சரி செய்ய முடியாமல் போகும்.

காரணமும் இதுவே! ஆம்! வாழ்க்கையிலும் இது பேலவே வரும் பிரச்சினைகளில் பலரும் தம்மில் சில மாற்றங்களை செய்ய நினைப்பது இல்லை. அனைவரும் என் ஒரு நிறத்தை சரி செய்து காத்திருப்பது போல் எல்லா கஸ்ரங்களும் கடந்து போகும் என்று பொறுமையாக வாழ்ந்தால் அவை எல்லாம் பழகி மட்டும் தான் போகும். நாமாக சில மாற்றங்களை மாற்ற வேண்டிய இடத்தில் மாற்றாமல் தீர்வு கிடைப்பது சாத்தியம் இல்லை. ஒன்று மட்டுமே சரியாக இருக்கும். மிகுதி அனைத்தும் எப்பொழுது சரியாகும் எனும் வினாவுடனே இறுதி வரை இருந்து விடும். என் 5 நிறங்களை போல்.

ஆரம்பத்தில் சரியாகவே இருந்தேன் “சாவி இல்லாத பூட்டை மனிதன் உருவாக்குவதே இல்லை” ஆகவே பழைய நிலைக்கு என்னை மாற்ற முடியும். அதற்கு சிறு முயற்சி போதும் நான் சரியாக வருவதற்கு. இரு விரல்கள் மாற்றத்தை விரும்பும் மனம் இருந்தால் போதும். வாழ்க்கையிலும் அப்படியே! உங்கள் மனம் உங்களிடமே உள்ளது. மனதின் சக்தி அறிந்தவன் இவ் உலகத்தை வென்றிடலாம். ஆம் எண்ணம் போல் தான் வாழ்க்கை! மாற்றம் ஒன்றே மாறாதது. இதை தெரிந்தவர் பலர்.

ஆகவே மனம் நினைத்தால் அடுத்து உங்களிற்கு இரு விரல்கள் தேவை. இரு விரல்கள் போல் உங்களை சுற்றி கட்டாயம் இருவர் இருப்பார்கள் அவர்களை கண்டு பிடிப்பது வாழ்கையில் கட்டாயமான ஒன்று. தாயாக தந்தையாக மனைவியாக காதலியாக நண்பனாக ஒருவர் கட்டாயம் இருப்பார்.

இவ் வாழ்க்கை ஒரு முறையே! நான் இப்படியே சரியாகாமல் குப்பையாக குப்பைத்தொட்டி சென்றால் மறு பிறவியில் மீழ்சுழற்சி செய்யப் பட்ட வேறு பொருள் ஆகிவிடுவேன் ஆகவே குப்பைத்தொட்டி செல்லும் முன் முழுமை பெற்று விடவேண்டும். அது போலவே வாழ்க்கையும். வாழ்க்கை ஒரு முறையே மீண்டும் இவ்வாழ்க்கை இதே பெயருடன் இதே சொந்தங்களுடன் கிடைக்க போவதில்லை. இதுவே நிதர்சனம்.

மீண்டும் செல்கின்றேன் 3.47 வினாடிகளில் என்னை தீர்த்தவர்களும் உண்டு. வாழ்வில் தீர்க்காமல் விட்டவர்களும் உண்டு யாருமே இரு நூற்றாண்டுகள் வாழப்போவதில்லை. கிடைத்த வாழ்க்கையில் சில மாற்றங்களை செய்து என் வண்ணங்கள் போல் வாழ்கையிலும் வண்ணமயமாக வாழ்ந்திடுங்கள்.

**துணிச்சலுடன் செயற்பட எப்போது முடிவு எடுக்கிறோமோ அப்போதே வாழ்க்கையில் வெற்றி நோக்கி செல்கின்றோம் என்பது உறுதி.**

***‘சாவி இல்லாத பூட்டை மனிதன் உருவாக்குவதே இல்லை’***



# நியூசிலாந்தின் புதிய ரட்சகன்

எஸ்.எஸ்.நுஜன்


நடந்து முடிந்த நியூஸிலாந்து இங்கிலாந்து தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் டெஸ்ட்டில் அறிமுகமான கென்வே, ஒருபுறம் இங்கிலாந்தின் முன்னாள் வீரர்களுடன் ஒப்பிடப்படுகிறார். இங்கிலாந்தின் கெவின் பீட்டர்சன் போல இருவரும் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர்கள், மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் சிறந்தவர்கள் போன்ற காரணங்களாலும் மறுபுறம் அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் மைக் ஹசியுடன் அதிக ஆண்டுகளின் காத்திருப்பின் பின்னான அறிமுகம் என்றும் ஒப்பிடப்படுகிறார்.

கடந்த ஆண்டு இறுதியில் ரி20 சர்வதேச போட்டிகளிலும் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் அறிமுகமானார் கென்வே. நூற்றுக்கும் மேற்பட்ட முதல்தர ஆட்டங்களில் ஆடி 7000 ரன்களை கிட்டத்தட்ட 50 சராசரியில் நியூசிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளில் எடுத்து நீண்டகாலம் காத்திருந்த கென்வேக்கு தன் அறிமுக டெஸ்டில் விளையாட வாய்ப்பு கிடைத்தது. அதுவும் கிரிக்கெட்டின் தாயகமான லோட்ஸ் (Lord's) மைதானத்தில் விளையாடும் வாய்ப்பு. கிடைத்த இந்த வாய்ப்பை இரட்டை சதம் அடித்து நிருபித்து இருக்கிறார்.

தனது முதல்தர ஆட்டங்கள் மற்றும் உள்ளூர் ஆட்டங்களை 2009 இல் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிய டெவன் கென்வே, 2017 மார்ச் மாதம் தன் முதலாவது முதல்தர ஆட்ட இரட்டை சதத்தை அடித்தார். ஆனால் இது தான் தென்னாப்பிரிக்காவில் இவரின் இறுதி இன்னிங்ஸ்.

நியூஸிலாந்தா இங்கிலாந்தின் Kolpak க்கா என்பதில் நியூஸிலாந்தை தேர்வு செய்து 2017 ஒகஸ்ட் மாதம் நியூசிலாந்தின் வெலிங்டன் க்கு புறப்பட்டார். புறப்படும் போது தனது உடமைகள் வாகனங்கள் என எல்லாவற்றையும் ஒரு முழுமையான





Tom Moody @TomMoodyCricket · Jun 3
An extremely well crafted test century from Devon Conway, a player who appears to have a great understanding of his game. An apprenticeship developed over time in two contrasting environments has been his friend. @BLACKCAPS have found their own Mike Hussey! #ENGvNZ

புது ஆரம்பத்திற்காக விற்று விட்டார். தென்னாப்பிரிக்காவில் நிலையான ஒரு இடம் கிடைக்காமல் தவித்த கென்வே, நியூசிலாந்தில் ஆரம்ப நிலை (top-order) துடுப்பாட்ட வீரராக உருவெடுத்தார். 2019-2020 பருவகாலத்தில் மூன்று விதமான நியூஸிலாந்தின் உள்ளூர் தொடர்களில் அதிக ரன்கள் குவித்த வீரர் ஆனார் - 2018-19 இல் இரு தொடர்களில் அதிக ரன்கள் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டெவன் கென்வெ, அறிமுக டெஸ்டில் இரட்டை சதம் விளாசிய ஏழாவது வீரர் ஆகி இருக்கிறார் (இந்த வருடம் 2021 இல் இது இரண்டாவது சந்தர்ப்பம் அறிமுக வீரர் இரட்டை சதம் பெறுவது). அதுவும் நியூஸிலாந்தின் இரண்டாவது வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தமாக ஐந்து நியூஸிலாந்து வீரர்கள் அறிமுக டெஸ்டில் சதம் அடித்த வீரர்களாக உள்ளனர்.

அத்துடன் இவர் இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலியின் சாதனை ஒன்றையும் இந்த இரட்டை சதம் மூலம் தகர்த்து






இருக்கிறார். அதாவது லோட்ஸ் மைதானத்தில் அறிமுக டெஸ்டில் அதிக ரன்கள் எடுத்த வீரர் என்பதாகும். இதற்கு முன்னர் கங்குலி தன் அறிமுக டெஸ்டில் எடுத்த 131 ரன்களே லோட்ஸ் மைதானத்தில் ஒரு அறிமுக டெஸ்டில் விளையாடும் வீரரின் அதிக ரன்களாக இருந்தது. அத்துடன் சில ஒற்றுமைகளும் கங்குலி மற்றும் கென்வே இடையே உள்ளமை வியப்பாக இருக்கிறது. அதாவது இருவரும் பிறந்த தேதிகள் ஜூலை மாதம் எட்டு ஆகும். கங்குலி - 1972 ஜூலை 8, கென்வே - 1991 ஜூலை 8. இருவரின் அறிமுக சர்வதேச ஆட்டங்களும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தான். கங்குலி ஒருநாள் சர்வதேச போட்டி மூலமும் கென்வே ரி20 சர்வதேச போட்டி மூலமும் தம் சர்வதேச போட்டிகளில் அறிமுகமானார்கள். இருவரும் தம் இரு அணிகளின் 84வது வீரர்கள் என்பதும் சுவாரஸ்யமான மேலதிக தகவல்.

ஒருநாள் சர்வதேச அரங்கில் 75 ரன்கள் சராசரியும் ரி20 சர்வதேச ஆட்டங்களில் 59 ரன்கள் சராசரியும் வைத்திருக்கும் 29 வயதான டெவன் கென்வெ டெஸ்ட் ஆட்டத்திலும் பிரகாசித்து நியூஸிலாந்தின் மூன்று விதமான ஆட்டங்களிற்கான வீரராக வலம் வர வாழ்த்துகள்...